
# தமிழரசு

16-4-1980 50 கா




நவீன தீயணைப்பு இயந்திரத்தை (SNORKEL) 25.3.'80 அன்று ஆளுநரின் ஆலோசகர் திரு டி. என். லட்சுமி நாராயணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் சென்னையில் இயக்கி வைத்தார்.



# நானோர் பாவேந்தன்

(பாவேந்தர் பாரதிதாசன்
தம்மைப்பற்றி யாத்த கவிதை)



தமிழி லக்கணம், தமிழி லக்கியம்
எனக்குச் சொல்லிக் கொடுத்தவர், புதுவைத்
திருப்புளி சாமி ஐயா, செந்தமிழ்
இருப்பே என்னும் பங்காரு பத்தர்,
புலவர்க்குப் புலமை ஈந்து நிலவு
பெரும்புகழ்ப் பெரிய சாமிப் பிள்ளை
என்பவர் ஆவர் இவர்களின் அருளினால்
பதினே ழாண்டும் பற்றா இளையேன்
நாற்பது புலவர் தேர்தலில் முதலாத்
தேர்வு பெற்றேன் காரைக் காலின்
ஒருபகுதி யான ''நிரவியல்'' ஓர்இடம்
ஓர்ஆ சிரியர் தேவைஎன் றதனால்
அந்த இடத்தை அடையக் கருதிப்
புலவர் பல்லோர் போட்டி இட்டனர்
யானும் பதினெட்டாண் டெய்தினேன், ஆயினும்
''இளையன் ஆதலால் அவன்அவ் விடத்தை
அடைதல் ஆகா தென்றனர்'' ஆள்வோர்.
ஆயினும் நானே அதனை அடையச்
சட்டங் காட்டித் தடைகளை நீக்கி
அன்றுஎனை நிரவி ஆசிரியன் ஆக்கினார்.


ஆசை பற்றிய தமிழின் தொண்டில்
ஒட்டிய என்உளம் வெட்டிலும் பிரியாது.
வெண்பா முதலிய எழுதும் என்கை:
வண்ணம் பாடிக் கொண்டிருக்கும்வாய்!
முப்ப தாண்டு முடியும் வரைக்கும்நான்
எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?
கடவுள் இதோஎன்று மக்கட்குக் காட்டிச்



புரட்சிக் கவிஞர்
பாரதிதாசனார்
தோற்றம் : 29-4-1891
மறைவு : 21-4-1964



தமிழரசு
மலர்:10 இதழ்:20
16-4-1980



''சுடச்சுட அவன்அருள் துய்ப்பீர்'' என்னும்!
ஆயினும் கடவு ளுருவம் அனைத்தையும்
தடவிக் கொண்டுதான் இருந்ததென் நெஞ்சம்!
பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை, புதுநடை காட்டினார்:
நானும் அவர்க்கே எழுத்தியல் உதவுமோர்
தொண்டினால், அவர்க்கும், புலவர்க்கும் தோன்றும்
சண்டையில் வெற்றி கண்டிடச் செய்தேன்.
முட்புதர்க் களாப்பழம் அதனில் மொய்க்கும்
கட்புலம் போல என்றன் உள்ளம்,
சாதி என்பதோர் இடரைத் தவிர்த்தும்
சழக்கே என்பதோர் பெரும்படை தாக்கியும்
இளைஞர்க்குத் தமிழ்நலம் தந்து ஆசிரியர்
ஆக்குமோர் தொண்டினை நோக்கி நடந்தது.
நல்லா சிரியன்மார் நல்லா சிரியைமார்
பல்லோர் என்னிடம் பயின்றவர் இன்றும்
அலுவலில் அழகுற வாழ்கின் றார்கள்.
திலகர் செய்த உரிமைக் கிளர்ச்சியால்
கொலைமுதற் பற்பல குற்றம் சுமந்த
மாசிலா மனத்து மாட சாமியும்
அன்புறு பாரதி அரவிந் தர்முதல்
வன்முறை யுடையரால் வருந்துவார்க்கு உதவியாய்
பன்முறைப் புதுவையில் செத்துப் பிழைத்தேன்.
மக்கள் நலம் காத்தல் கண்டுஆள வந்தார்
எக்கேடு சூழினும் அஞ்சேன்; ஒருநாள்
சிறைக்கதவு திறக்கப் பட்டது; சென்றேன்
அறைக்கதவு புனிதப் பட்டது; மீண்டேன்.
புதுவை அரசியற் போரில் இறங்குவேன்;.
இதைவை யேன்எனில் அதைவிட்டு வையேன்.

நாய்பல நாற்புறம் வாய்தி றக்கினும்
தாய்மொழித் தொண்டு தவறிய தில்லை.
நன்றி மறந்தவர் இன்று வரைக்கும்
குன்று கொணர்ந்து தூற்றுவர்; நன்றெனப்
பட்டதைச் செய்வேன்; பகைவருக்கு அஞ்சேன்.
வாய்ப்பு நேர்ந்தபோ தெல்லாம் பிறரைத்
தூக்கி விடுவதில் சோர்ந்ததே இல்லை.
படிப்புத் தந்தேன் சோறுதந் தேன்தலை
எடுக்கச் செய்தேன் என்தலை தனைஅவன்
அறுக்க முயன்ற போதும்சிரித்தேன்;
நானோர் பாவேந்தன் என்பதனை
நானிலத் தமிழர் நன்றே அறிவர்.
என்பாட்டுச் சுவையில் ஈடு பட்டவர்
நோக்கினால் நூற்றுக்கு நாற்ப தின்மர்,
என்நடை தம்நடை; என்யாப்புத் தம்யாப்பென்று
இந்நாள் எழுந்துள பாவலர் தம்மை
எண்ணினால், இருப்பவர் தம்மில் நூற்றுக்குத்
தொண்ணூற் றொன்பது பேர்எனச் சொல்லுவர்.
.. .. .. .. நாட்டுப் பற்றுள நல்லவர்
மிகப்பலர் என்றன் பாட்டின் மேன்மையை
உணர்ந்து சிலசொல் உரைத்த துண்டு;
முட்டுக் கட்டை இட்ட தில்லை.
மற்றும், தமிழே உயிரென வாழும்
தோழர் சில்லோர் வாழ்வின் பயனென
என்பாட் டுக்களை என்றன் நூல்களை
வரப்படுத்தி முறைப்படி வாய்விட்டு
வீட்டிலும் கூட்டந் தன்னிலும் மிக்க
ஒழுங்குறப் பாடு கின்றதும் உண்மையே.
ஒருநாள், ஓரிலக்கம் மக்கள் கூடிக்
கால்இ லக்கம் வெண்பொற் காசும்
பொன்னின் ஆடையும் ஈந்ததும் பொய்யன்று.

—(பூம்புகார் பிரசுரம் வெளியிட்டுள்ள
பாவேந்தரின் 'தேனருவி' என்னும் நூலி
லிருந்து)

# சமத்துவம் உருவாகிட...



**டாக்டர் அம்பேத்கார்**

**ஏப்ரல் 14 அம்பேத்கார் பிறந்த நாள்**

**சா**தியை நீங்கள் விரும்பவில்லையானால் உங்கள் உத்தம சமூக அமைப்பின் தன்மை என்ன எனக் கேள்வி கேட்கப்படலாம். சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளைஅடிப்படையாகக்கொண்ட ஒரு சமூக அமைப்பே எனது இலட்சியம். அத்தகைய ஒரு சமூக அமைப்பு ஏன் ஏற்படக் கூடாது? சகோதர பாவனை ஏன் ஏற்படாது? அதற்கு எத்தகைய முட்டுக் கட்டையும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை.

உத்தமமான ஒரு சமூகம் மற்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும், சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம் மற்ற பகுதிகளிலும் பரவக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஓர் உத்தமமான சமூக அமைப்பில் எல்லாருக்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் தொடர்பு ஏற்பட பலதிறப்பட்ட மார்க்கங்களும் சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும். அதாவது சமூகத்தில் அங்கம் பெற்றுள்ள உறுப்பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்கு சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம்.


சகோதரத்துவமும் ஜனநாயகமும் வெவ்வேறானவையல்ல. ஜனநாயகம் என்பது ஓர் அரசியல் முறை மட்டுமன்று; பரஸ்பரப் பற்றுடைய ஒரு சமூக வாழ்வுமாகும். சுதந்தரத்தை யாராவது ஆட்சேபிப்பார்களா? சுதந்தர வாழ்வை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அதுபோலவே உலக வாழ்க்கைக்குரிய சொத்து, கருவிகள் விஷயத்திலும் எவரும் சுதந்தரத்தை ஆட்சேபிக்க மாட்டார்கள். அப்படியானால் ஒருவனுக்கு இயல்பாக அமைந்துள்ள சக்திகளை அவன் விரும்புகிறபடி உபயோகிக்க ஏன் சுதந்தரமளிக்கலாகாது? இதர விஷயங்களில் சுதந்தரமளிக்க விரும்பும் சாதீய அபிமானிகள் தொழில் செய்யும் விஷயத்தில் சுதந்தரமளிக்க இணங்குகிறார்களில்லை. ஆனால், அம்மாதிரி சுதந்தரத்தை வழங்காமலிருப்பது அடிமைத்தனத்தினை வளர்ப்பதாகும். ஏனெனில், சட்டப்படி அடிமைகளை வைப்பது மட்டும் அடிமைத்தனமல்ல. ஒருவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மற்றவர்கள் நடக்குமாறு சமூக அமைப்பில் இடமிருப்பது, ஒரு மாதிரி அடிமைத்தனமாகும். சட்டப்படி அடிமை வர்த்தகமில்லாத இடங்களிலும் இந்த நிலைமை இருந்துதான் வருகிறது. சாதி ஏற்பாட்டின்படி சில வகுப்பார் அவர் விரும்பாத தொழிலைச் செய்யும்படியும் கட்டுப்பாடு இருந்து வருகிறது.



வாதட்சிணை கொடுத்தாலன்றி கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறுகிற எந்த வாலிபனும், தான் படித்த படிப்பிற்கும், தான் பிறந்த நாட்டிற்குமே இழிவு செய்பவனாவான்; அத்தோடு பெண்ணினத்தையே அவமானப்படுத்துபவனும் ஆவான்!

-மகாத்மா காந்தியடிகள்

சமத்துவத்தை எவராவது ஆட்சேபிப்பார்களா? பிரஞ்சுப் புரட்சியில் விவாதத்துக்கு இடமாயிருந்த விஷயம் இது ஒன்றுதான். சமத்துவத்துக்கு எதிரிடையாகக் கூறப்படும் நியாயம் ஒருக்கால் பொருத்தமாக இருக்கலாம். எல்லாரும் சமமாக இருக்கவில்லையென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். எனினும், அதனால் என்ன குடிகேடு வந்து விடப்போகிறது? சமத்துவம் ஒரு கட்டுக்கதையாக இருக்கலாம். எனினும் ஒரு முக்கியமான கொள்கையாக நாம் அதை ஒப்புக்கொள்ள வேண்டியது தான்.



ஒருவனுடைய சக்திக்கு (1) சரீர சம்பந்தமான பரம்பரைக் குணங்கள் (2) வளர்ப்பு, கல்வி, விஞ்ஞான அறிவு, மற்றும் மேலான வாழ்க்கைக்குரிய வசதிகள் (3) சுய முயற்சி ஆகியவை காரணமாக இருக்கின்றன.



இந்த மூன்று விஷயங்களிலும் மக்கள் சமத்துவமான நிலையிலில்லையென்பது மெய்தான். ஆனால், மக்களுக்குள் இவ்விஷயங்களில் சமத்துவம் இல்லாதிருப்பதானால் அவர்கள் எந்நாளும் சமத்துவமில்லாதவர்களாயிருப்பதை நாம் பார்த்துக் கொண்டு இருக்கவேண்டுமா என்பதே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய பிரச்னை. இதற்குச் சமத்துவ எதிரிகள்தான் விடையளிக்க வேண்டும். மக்களைத் தனித்தனியாகக் கவனித்தால் முயற்சியில் அசமமாக இருப்பவர்களை சமத்துவமில்லாதவராகப் பாவிக்க வேண்டியதுதான். எனினும், ஒவ்வொருவருடைய சக்தியும் பூரண வளர்ச்சியடைவதற்குள்ள சந்தர்ப்பங்கள் அளிக்கப்படத்தான் வேண்டும். ஆனால், முதல் இரண்டு விஷயங்களிலும் மக்களுக்குள் சமத்துவம் இல்லாதிருந்தாலும் அவர்களை எந்நாளும் சமத்துவமில்லாதவர்களாகவே. வைத்திருந்தால் என்ன நேரும்?

பிறப்பு, வளர்ப்பு, கல்வி, குடும்பப் பெருமை, தொழில் சம்பந்தம், பரம்பரைச் சொத்து முதலிய விஷயங்களில் அநுகூலமான நிலையிலிருப்பவர்களே வெற்றியடைவார்கள். அதாவது விசேஷ உரிமையுடையவர்களே மதிக்கப்படுவார்க்ள். எனவே, மூன்றாவது அம்சப்படி அசமமான நிலைமையிலிருக்கும் ஒருவன் எந்நாளும் அசமமான, நிலையிலிருப்பதை நாம் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதோ, அப்படியே விசேஷ உரிமைகள் இல்லாதவன் என்றும் விசேஷ உரிமை இல்லாதவனாகவே இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. சமத்துவத்தை மறுக்காமலிருப்பதற்கு இது ஒரு காரணமாகும்.



சமத்துவத்தை ஒப்புக்கொள்வதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. ராஜ்ய தந்திரி இலட்சோப இலட்சம் சனங்களைக் கவனிக்க வேண்டியவனாக இருக்கிறான். எனவே, சனங்களில் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கவனித்து அவரவர் தகுதிப்படி நியாயம் வழங்க முடியாது.

மக்களுக்குச் சமநீதி வழங்க வேண்டியது எவ்வளவு தேவையாகவும் நீதியாகவும் இருந்தாலும் சரி, மக்கள் சமூகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைக்கவே கூடாது. சமத்துவக் கொள்கை கட்டுக்கதையாக இருந்தாலும், அரசியல் வெற்றிக்கும் சமூக ஒழுங்குக்கும் அதை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

[1936-ல் லாகூரில் நடைபெறவிருந்த சாதி ஒழிப்புச் சங்கத்தினரின் ஆண்டு மாநாட்டிற்கு தயாரிக்கப்பட்ட தலைமை உரையிலிருந்து].

# இந்தியாவின் தொழிற் புரட்சியில் நேருவின் பங்கு



**பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன்**
துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

“என்னைப் பற்றி யாரேனும் நினைக்க விரும்பினால், எண்ணத்திலும் இதயத்திலும் இந்தியாவையும் இந்திய மக்களையும் பரிபூரணமாக நேசித்தவர் இவர் என எண்ணுவதையே விரும்புகிறேன்'' என்று கூறியவர் மனிதருள் மாணிக்கமாம்நேருஅவர்கள். தன்னுடைய ஒவ்வொரு பணியும் இந்திய மக்களின் ஏற்றமான வாழ்வுக்குத் துணையாய் அமைய வேண்டும் என்பதே நேரு அவர்களின் விருப்பமாகும். இந்த விருப்பத்திற்கு ஏற்ற முறையில், அவர் நம் நாட்டின் பிரதமராகப் பணியாற்றிய காலத்தில் உழவும் தொழிலும் சிறக்க, முறைகளையும் திட்டங்களையும் வகுத்துச் செயல்படுத்தினார்.

அவர் காலத்தில் இந்தியநாடு ஒரு தொழிற்புரட்சியைக் கண்டது என்றால் அது முற்றிலும் உண்மை. நேரு அவர்கள் இந்திய நாட்டு உழவும் தொழிலும் விஞ்ஞானத்தையும் தொழில் நுணுக்க முறைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கை உடையவர். எனவேதான் 'விஞ்ஞானத்தையும் தொழில் நுணுக்க முறைகளையும் பயன்படுத்தித் தொழில் வளர்ச்சிக்கு வழி செய்து உற்பத்தியை அதிகரிக்க விரும்புகிறோம். நாட்டிலே அதன்மூலம் தொழிற்புரட்சியை உண்டாக்க விரும்புகிறோம்'' என்று பல கட்டங்களில் கூறியுள்ளார். அவைகளைச் செயல்படுத்தி இந்தியாவின் தொழிற்புரட்சிக்கும், விஞ்ஞானத் தொழிற்கல்வி வளர்ச்சிக்கும் நேரு அவர்கள் மூலகாரணமான சிற்பியாக விளங்கினார். இவற்றின் காரணமாக நேரு அவர்கள் இந்திய மக்களின் உள்ளத்தில் நீங்காத நிலைத்த வாழ்வைப் பெற்றுள்ளார்.

*1947* ஆகஸ்டு 15-ஆம் நாள் நாட்டுப் பிரிவினையுடன் அரசியல் சுதந்திரம் பெற்றபோது புதிய சூழ்நிலைக்கு ஏற்ப நாட்டின் பொருளாதாரத்தையும் தொழில் வளர்ச்சியையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இதனை உணர்ந்த நேரு அவர்கள் ஆட்சியில் *1948, 1956* ஆகிய ஆண்டுகளில் இரண்டு தொழிற் கொள்கைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; *1951, 1953, 1956* ஆகிய ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி மற்றும் தொழில் ஒழுங்குச் சட்டங்கள் நிறைவேறின. நேரு அவர்கள் காலத்தில் மூன்று ஐந்து ஆண்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டன.



ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்குவதற்கு முன்பு நாட்டிலிருந்த பெரும்பாலான தொழில்கள் நுகர்வுப்பொருள்களை உற்பத்தி செய்வதில் மட்டுமே முனைந்திருந்தன. தொழில் வளர்ச்சிக்கு உதவக்கூடிய அடிப்படை ஆதாரத் தொழிற்களோ நுகர்வுப் பொருள்களைத் தயாரிக்க உதவும் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் கனரகப் பொறியியல் துறைகளோ நாட்டில் குறிப்பிட்டுக் கூறுமளவு இல்லை. அடிப்படை, ஆதார, கனரகத் தொழில்கள் இல்லை என்றால் அந்த நாட்டில் நிலையான, உண்மையான வளர்ச்சியைக் காண முடியாது. இதன் காரணமாக இந்திய நாட்டில் ஒரு சார்பான தொழில் வளர்ச்சியே (Lop sides development) இருந்தது. இவைகளை நன்கு உணர்ந்த நேரு அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாக இந்திய நாட்டின் நிலையான உண்மையான தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தார்.

''நேருவின் தலைமையும், துணையும் இன்றி, அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியாது'' என்கின்றார் பேராசிரியர் மகல நோபிஸ்.

## தொழில்துறையில் முன்னேற்றம்:

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாகத் தேவைப்படும் மூலப்பொருள் இரும்பு எஃகு ஆகும். 1950-க்கு முன்பு பொதுத்துறையில் செயல்பட்டு வந்த மைசூர் இரும்பு எஃகுத் தொழிற்சாலை, தனியார் துறையில் செயல்பட்டு வந்த ஜாம்செட்பூர் டாட்டா இரும்புத் தொழிலகம், பார்ன்பூரில் உள்ள இந்திய இரும்பு எஃகு நிறுவனம் போன்றவைகளின் மூலம் ஆண்டுதோறும் 10 லட்சம் டன் இரும்பைப் பெற முடிந்தது. இந்த உற்பத்தியைக் கணிசமான அளவு அதிகரித்தால்தான் இந்திய நாட்

டின் தொழில் துறையில் முன்னேற்றம் காண முடியும் என நேரு அவர்கள் கருதினார். இதன் காரணமாக 1954 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து ஒரிசாவைச் சேர்ந்த ரூர்கேலா இரும்புஎஃகுத் தொழிற்சாலை உருவாயிற்று.

1955-ல் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து மத்தியப் பிரதேசத்திலுள்ள பிலாய் என்ற இடத்திலுள்ள இரும்பு எஃகு ஆலை ஏற்பட்டது. 1956-ல் இங்கிலாந்தோடு ஒப்பந்தம் செய்து மேற்கு வங்காளத்திலுள்ள துர்காபூர் என்ற இடத்தில் இரும்பு எஃகு ஆலை தோன்ற வழி வகுக்கப்பட்டது. இவற்றின் காரணமாக இரும்பு உற்பத்தி மிகவும் அதிகமாயிற்று.

**எங்கும் தொழிற்சாலை மயம்:**

1954-55-லிருந்து 1960, 61-க்குள்எஃகுப்பாளங்களின் (ingot) உற்பத்தி நான்கு மடங்காகப் பெருகிற்று. இந்திய இரும்பு எஃகுத் தொழிலின் வளர்ச்சி ஜப்பான், ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் இத்தொழிலின் வளர்ச்சி வேகத்திற்குச் சற்றும் குறைந்ததன்று எனக் கூறத்தக்கவாறு இத்தொழில் வளர்ச்சி பெற்றது. அடிப்படை எந்திரங்களை உருவாக்கவல்ல கனரக எந்திரத் தொழிற்சாலைகள் தோன்றித் தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் பெரிய, சிறிய நடுநிலைத் தொழில்கள் தோன்ற வழி அமைந்தது.

பெங்களூரிலுள்ள எச். எம். டி (HMT) ஐதராபாத் பிராகா தொழிற்சாலை, பம்பாய் அருகே உள்ள அம்பர் தொழிற்சாலை, ராஞ்சியில் உள்ள பவுண்டரி போர்ஜ் (Foundary forge) தொழிற்சாலை, போபாலில் உள்ள கனரக மின் தொழிற்சாலை, பஞ்சாபில் உள்ள எந்திரக்கருவித் தொழிற்சாலை போன்ற பல அடிப்படை ஆதாரத் தொழில் அகங்கள் தோன்றியதும், நேரு, அவர்களின் காலத்தில்தான்.

**தன்னிறைவு:**

இவற்றின் காரணமாகப் பல்வேறு தொழில்களுக்குத் தேவைப்படும் எந்திரங்களுக்காகப் பிற நாடுகளை நம்பியிருந்த நிலை மாறியது.

சணல், பஞ்சாலைத் தொழில், சர்க்கரை உற்பத்தித் தொழில்

> *பெண்ணின் நிலை உயரும்போது ஆணின் நிலையும் உயரும். ஒவ்வொருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலைமையே உயர்வடையும்!*
>
> -மகாத்மா காந்தியடிகள்

போன்றவைகளை நவீனமயமாக்கும் முயற்சிகள் தோன்றின. அவைகளுக்கு வேண்டிய எந்திரங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டன.

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாத வேண்டுவனவற்றில் மின்சாரம் சிறப்பிடம் வகிக்கின்றது. இதற்கான முயற்சியில் நேருவின் அரசு ஈடுபட்டு, பல புதிய மின்சாரத் திட்டங்களை உருவாக்கியும், அனல் மின்சாரத் திட்டங்களை ஏற்படுத்தியும் உற்பத்தி அதிகரிப்புக்கு ஏற்பாடு செய்தது. 1950-51-ல் நீர் மின்சாரம் 0.56 மில்லியன் கிலோவாட்டாக இருந்தது. 1960-61ல் இது 1.93 மில்லியன் கிலோ வாட்டாக உயர்ந்தது.

1950-51ல் 1.74 மில்லியன் கிலோ வாட்டாக இருந்த அனல் மின்சாரம், 1960-61ல் 3.77 மில்லியன் கிலோ வாட்டாக உயர்ந்தது.

இப்படியாக மின்சார உற்பத்தி 10 ஆண்டுகளில் இரண்டரை மடங்கு பெருகிற்று. இது ஒரு நல்ல சாதனையே.

ஒரு பெரிய நாட்டுக்கு கப்பல் கட்டும் தொழிலும், விமானம் கட்டும் தொழிலும் மிக முக்கியமானதாகும். இவை இரண்டும் நம் நாட்டில் அண்மையில்தான் ஆரம்பிக்கப்பட்டன. தனியார் துறையில் விசாகப்பட்டினத்தில் இயங்கிய கப்பல் கட்டும் தளம் 1952-ல் பொதுத்துறைக்கு மாற்றப்பட்டது. இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை நிறுவப்பட்டு, விமான உற்பத்தி நடைபெற்று வருகிறது.

நவீன எஃகு இரயில் பெட்டிகளை உருவாக்க சென்னைபெரம்பூரில் பெரிய தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இரயில் எஞ்சின்களைத் தயாரிக்க கல்கத்தா அருகே உள்ள சித்தரஞ்சனில் தொழிலகம் தோற்றுவிக்கப்பட்டது. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படுவது போக்குவரத்து வசதி. இதனை நன்கு உணர்ந்த நேரு அரசு இதற்கான தொழிலகங்களைத் தோற்றுவித்தது.

தொழிற்புரட்சிக்கு உதவிடும் முக்கியக் கூறுகளில் நிலக்கரி உற்பத்தி ஒன்று. நம் நாட்டில் நிலக்கரித் தொழில் 1774-இல்இருந்தே இயங்கி வருகிறது. ஆனால்இதன் வளர்ச்சி 1930-க்குப் பின்தான் துரிதமான முன்னேற்றம் பெற்றது. 1950-ஆம் ஆண்டின் கரி உற்பத்தி 32 டன்களேயாகும். 1955-லிருந்து ஆண்டொன்றுக்கு 38 மில்லியன் டன் நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டது. 1962ல் இது 54 மில்லியன் டன்களாக உயர்ந்தது. 1964-ல் 66 மில்லியன் டன்களாக வளர்ந்தது. இவ்வாறு இத்தொழில் விரைவாக வளர்ந்ததற்கு இரயில்வேக்களின் விரிவும், ஆலைத்தொழில்களின் வளர்ச்சியும் காரணங்களாகும்.

ஒரு நாட்டின் விவசாயம் சிறப்பாக அமைய வேண்டுமானால் அந்நாட்டின் உர உற்பத்தி கணிசமான அளவு உயர வேண்டும். இதனைக்கருத்தில் கொண்ட நேரு அவர்களைத் தலைமை கொண்ட அரசு இரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டிற்று. எனவே முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பீகார் மாநிலத்தினைச் சேர்ந்த சிந்திரியில் பொதுத் துறையில் ஒரு உரத்தொழிற்சாலை தொடங்கப்பட்டது. நம் நாட்டின் தேவை அப்போதும் நிறைவேறவில்லை. எனவே, ரூர்கேலா, நங்கல், நெய்வேலி போன்ற இடங்களிலும் உரத் தொழிலகங்கள் தோன்றின. இவைகளின் தோற்றமே பசுமைப் புரட்சிக்குக் காரணமாயின. தாமோதர் பள்ளத்தாக்கு பக்ரா நங்கல், துங்கபத்ரா, ஹிராகுட் போன்ற இடங்களில் கட்டப்பட்ட அணைகள் பன்முகநோக்குடையனவாய் அமைந்து உழவிலும் தொழிலிலும் பெரும் புரட்சியைக் காண உதவின.

**தனியார் துறைத் தொழில்கள்:**

நாட்டின் பிரிவினையின் காரணமாக 70 சதவிகிதத்திற்கும் மேலான சணல் விளையும் நிலங்கள் பாகிஸ்தானுக்குத் தரப்பட்டது. இதனால் சணல் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு

வழிகாட்டி இல்லாமல் தம்மைத் தாமே வழிகாட்டி களாகக் கொள்பவர்கள் பெரும்பாலும் முன்னேறுவ தில்லை!

-ஆலிவர் கோல்டுஸ்மித்

வெற்றி பெறவேண்டும் என்கிற எண்ணம்தான் மற்றெல்லாக் காரியங் களையும் விட ஒரு மனித னுக்கு முக்கியமானது!

-ஆபிரகாம் லிங்கன்

சணல் உற்பத்திப் பெருக்குத திட்டம் மேற்கொள்ளப்பட்டு 1951ல் 3.3 மில்லியன் பேல்களாகஇருந்த சணல் உற்பத்தி 1962-ல் 6.4 மில்லியன் டன்களாக உயர்த்தப் பட்டது. இதனால் சணல் தொழில் ஓரளவு பிழைத்தது.

முதலாவது, இரண்டாவது திட்ட காலங்களில் தனியார் துறைத் தொழில்கள் பெரிய அளவில் வளர்ந்தன. உதாரணமாக ஜவுளித்தொழிலை எடுத்துக் கொண்டால் 1950-ல் நம் நாட்டில் ஜவுளி உற்பத்தி சராசரி ஒரு நபருக்கு 8.33 மீட்டராகும். 1963-ல் இது 14.33 மீட்டராயிற்று. ஜனத்தொகை கணிசமான அளவு பெருகியுள்ள போதிலும் ஜவுளி உற்பத்தி இவ்வாறு அதிகரித்திருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

இது போன்று, சர்க்கரை, அலுமினியம், சிமெண்ட், காகிதம், சைக்கிள், தையல் இயந்திரம், மருந்து வகைகள், இரசாயனப் பொருட்கள் ஆகியனவும் கணிசமான அளவு வளர்ந்தன. இவையெல்லாம் நேருவின் ஆட்சிக் காலத்தில் வகுக்கப்பட்ட ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளாகும்.

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி துரிதமாகவும் சிறப்பாகவும் அமைய அந்த நாட்டு அறிவுவளம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதில் நேருவுக்கு அதிகமான நம்பிக்கை இருந்தது. எனவேதான், திட்டமிட ஆரம்பித்தபோதே, பல்வேறு விஞ்ஞானத் தொழில் நுணுக்கப் பிரிவுகளில் ஆராய்ச்சி நடத்துவதற்காகத் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் செயல்படும் 23 விஞ்ஞானத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவைதவிர இந்திய விஞ்ஞானக் கழகம், டாட்டா அடிப்படை ஆராய்ச்சிக் கழகம் என்பன போன்ற வேறு பல கழகங்களிலும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இவையெல்லாம் தொழில் வளர்ச்சிக்கு உதவும் நல்ல சாதனங்களாகும். இவை ஆரம்பிக்கப் பட்டதன் அடிப்படையில் இன்று நாட்டில் பல்வேறு துறைகளுக்குப் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏற்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

நேரு அவர்கள் ஆட்சியில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாக 1948-49-ல் 8,650 கோடி ரூபாயாக இருந்த தேசிய வருமானம், 1948-49 விலைப்படி 1963-64-ல் 13,970 கோடி ரூபாயாக வளர்ந்தது. 1948-49-ல் 249.6 ரூபாயாக இருந்த தனி நபர் சராசரி வருமானம், 1948-49 விலையின் அடிப்படையில் 1963-64-ல் 299.2 ரூபாயாக உயர்ந்தது. நடப்பு விலையை நோக்கும்போது இவைகளின் மதிப்பு இன்னும் அதிகமாக இருக்கும்.


இவ்வாறு தேசிய வருவாய் உயர்ந்து வருவதனைக்கண்ட நேருவின் மனம் மகிழ்ந்தது. ஆனாலும் அவரது இறுதி ஆண்டுகளில் அவர் உள்ளத்தில் ஒரு பெருங்கவலை இருந்து வந்தது என்பதனை அவருடைய பேச்சுக்களில் தெளிவாக உணர முடிகின்றது. எவ்வளவுதான் தொழிற்புரட்சி ஏற்பட்டாலும், எவ்வளவுதான் வருவாய் மிகுந்தாலும், மனச்செம்மை இல்லையென்றால், அமைதியோ, இன்பமோ காண முடியாது என்ற எண்ணம் நேரு அவர்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது.

**இந்தியாவின் ஒளிமயமான எதிர் காலம்!**

'இன்றைய வாழ்க்கை வசதிகளையும், விஞ்ஞான வாய்ப்புகளையும் பெறாத அனேகர் நம்மைவிட அறிவாளிகளாக இருக்கலாம் என்ற எண்ணம் என்னுள் எழுகிறது. வருங்காலத்தில் இந்த அறிவாற்றலையும் விஞ்ஞான வளர்ச்சியையும் ஞானத்துடன் கூடிய மனித குலத்தின் மேம்பாட்டையும் ஒன்று சேர்த்து இணைக்க முடியுமா முடியாதா என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை'', என்ற அவர்தம் மனக்குறையால் இதனை உணருகிறோம்.

மேலும், ''இன்று இந்திய மனதை எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சினை இதுதான். விஞ்ஞானம், தார்மீக மதிப்புகள் ஆகிய இரண்டுக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்துவது எப்படி? இந்திய இளைஞர்கள் இவர்களுடைய ஆசிரியர்கள், ஏன் ஒவ்வொரு இந்தியனும் கூட இந்தக் கேள்விக்கு விடை காண முயல வேண்டும். இதற்குச் சரியான விடை காண்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவின் எதிர்காலம், ஓரளவிற்கு உலகத்தின் எதிர்காலம் அமையும்'' என்ற பேச்சு அதையே தெளிவாக உணர்த்துகின்றது.

''நேருவின் அளவிற்கு உயர்வு பெற்ற அரசியல் தலைவர்கள் இருபதாம் நூற்றாண்டில் மிகச் சிலரே. வரலாற்று மேடையிலே நேரு ஒரு முக்கியமான நடிகர் என்பதை அவரது நண்பர்களும் விரோதிகளும்கூட ஒப்புக்கொள்கின்றனர்'' என்கிறார் மெக்கில் பல்கலைக் கழகப் பேராசிரியர் மைக்கேல் ப்ரேசர்.



# சுயமரியாதைக் கவிஞன்

கடவுளின் பெயரைச் சொல்லிக்
கட்டிய கதைக ளெல்லாம்
மடமையென் றெடுத்துச் சொல்லி
மாபெரும் போர்தொ டுத்துக்
கடமையை ஆற்றி நின்ற
கதிர்நிகர் பெரியார் கொள்கை
சுடர்விடப் பாடி வந்த
தொழத்தகு பாட்டு வேந்தன்

சுயமரி யாதைக் காரன்
சோர்வினை யறியா வீரன்;
மயலுறு பகைவர் நெஞ்சம்
மருண்டிடச் செய்யுந் தோளன்;
நயமிகு தமிழர் பண்பில்
நஞ்சினைக் கலக்கும் வஞ்சக்
கயவரைச் சுட்டெ ரிக்கும்
கனல்பொழி விழிகள் கொண்டான்.

நறுக்கிய கருப்பு மீசை
நரிக்குண மாக்கள் வாலை
நறுக்கிடும் தோற்றங் காட்டும்;
நற்றமிழ் மாந்தர் வாழ்வில்
குறுக்கிடும் பகைமை யெல்லாம்
குலைநடுங் கிடவே செய்யும்;
முறுக்கிய நரம்பில் நல்ல
முத்தமிழ்க் குருதி பாய்ச்சும்.



சொல்லிலே தேனும் உண்டு;
சுடர்விடுங் கனலும் உண்டு;
மெல்லவே தென்றல் பேசும்;
மீறிய புயலும் வீசும்;
நல்லமென் குயிலும் கூவும்
நடுவினிற் புலியும் பாயும்;
வல்லமை தமிழர்க் கிங்கே
வழங்கிய உணர்ச்சிப் பாட்டில்.



தமிழ்மொழி தழைக்க வேண்டின்
தமிழினம் நிமிர வேண்டின்
அமிழ்தெனப் பாட்டு வேந்தன்
ஆக்கிய பாடல் முற்றும்
தமிழரின் நெஞ்ச மெல்லாம்
தனியர சாட்சி செய்து
கமழ்ந்திட வேண்டு மிங்கே
களிநடம் புரிய வேண்டும்.



கவியரசு முடியரசன்

> நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்.
>
> —திருக்குறள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு - சின்னஞ்சிறிய கீற்றுக் கொட்டகைகளில் தொடங்கப் பட்ட மருத்துவமனை அது!

மருத்துவ வார்டுகள் அனைத்தும் கீற்றுக் கொட்டகைகளில் தான் அமைக்கப்பட்டிருந்தன!

இந்தச் சிறிய மருத்துவ மனையை அமைப்பதைமாபெரும் கடமையாக ஏற்றுப் பணியாற்றியவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள். 1923ஆம் ஆண்டிலே இருந்து இப்படியொரு மருத்துவமனையை அமைக்க வேண்டும் என்பதை இலட்சிய வேட்கையாகக் கொண்டும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். அதன் விளைவாக 1954-ஆம் ஆண்டு மருத்துவமனை அமைக்கும் பணிகள் தொடங்கப் பட்டன. 1955ஆம் ஆண்டு இந்த மருத்துவமனை தொடங்கப் பட்டது.

இந்த ஆண்டு அந்த மருத்துவ மனைக்கு வெள்ளிவிழா ஆண்டு.

உலகம் முழுவதும் எல்லாப் பகுதி மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் - இன்று பிரமிப்பு ஊட்டும் வகையில் வளர்ந்திருக்கும் அந்த மருத்துவமனை Cancer Institute என்று அழைக்கப்படும் புற்றுநோய் மருத்துவ மனையாகும். இந்தியாவின் தென்மண்டலப் புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனையாகவும் இன்று வளர்ந்திருக்கிறது.

இந்த மருத்துவமனையில் 'புற்றுநோய் சிகிச்சைக்காக' என்னென்ன சிகிச்சைகள் உண்டோ, அவை அனைத்தும் உள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்ல-அண்டை மாநிலங்களிலிருந்தும் மட்டுமல்ல - இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலிருந்தும், இலங்கை - மலேசியா போன்ற இடங்களிலிருந்தும் சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைப் பெற்றுச் செல்கின்றனர்.

புற்றுநோய்க்கு முதன் முதலாக 'கோபால்ட்' (Cobalt) சிகிச்சைப் பெறும்முறை கனடா நாட்டில் 1954ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலில் இந்தியாவில் மட்டுமல்ல தென்கிழக்கு ஆசியாவிலேயே ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூட கோபால்ட் சிகிச்சைக்குரிய யந்திரக் கருவிகள் அமைக்கப்படுவதற்கு




# சேவையில் சிறந்து விளங்கும் சென்னை புற்றுநோய் மருத்துவமனை

## புற்றுநோயின் அடையாளங்கள்

கன்னத்திலும், வாயிலும் புற்றுநோய் உண்டாவதற்கு முக்கியக்காரணம், பீடி, சுருட்டு, சிகரெட் முதலியவை களை உபயோகிப்பதும், வாயில் புகையிலை, வெற்றிலை முதலியன அடக்கிக் கொள்வதுமேயாகும். தொண்டைப்புற்று நோய் தொடக்கத்தில் குரல் மிகவும் கம்மலாகிக் கொண்டே வரும். இவ்வாறு கம்மலான குரலும், கரகரப்பும் சில வாரங்கள் அல்லது மாதங்கள் வரை நீடிக்கும். ஆகாரக் குழாயில் உண்டாகும் புற்றுநோய்க்கு உணவு, நீர் முதலியன விழுங்கும்போது கடினமாகவும், தொண்டை அடைப்பும் உண்டாவதே தொடக்க நிலையாகும். வயிற்றில் உண்டாகும் புற்றுநோயின் ஆரம்பத்தில் சாதாரண அஜீரணம் போன்ற குறிகளே தென்படும்.

பெண்களுக்கு வரும் புற்றுநோய் பெரும்பாலும் மார்பிலும் (Breast cancer) கருப்பப்பை சார்ந்தவிடத்திலும் (Uterine cancer) வரும். மார்புப் புற்றினால் தசை உப்பிப் பருமனாகிக் கொண்டே வரும். கருப்பப் பையின் வாயில் (Cervix) உண்டாகும் புற்றுநோயைப் பற்றியதில் முதலில் வீட்டு விலக்கு நாட்களுக்கிடையில் (Interval between menstrual periods) சிறு இரத்தக் கசிவு ஏற்படும். துவக்கத்தில் சில மாதங்கள் வரை ஒருவித பிசுபிசுப்புள்ள வெண்மையான சளி போன்று (Slimy white discharge) வழியும், மார்பில் சதை வளருவதையும்; கருப்பப்பை சார்ந்தவிடத்திலும் அசாதாரணக் கசிவு ஏற்படுவதையும் பெண்கள் வெட்கத்தினால் வெளியிடமாட்டார்கள். அதன் முடிவு விபரீதமாகி உயிருக்கே ஆபத்து விளைவிப்பதாகிவிடும். பெண்களுக்குப் பிரசவ காலங்களில் கர்ப்பப்பையின் வாய் அகன்றுவெடிப்புக் காயம் ஏற்படுவதுண்டு. அதே தழும்பிலிருந்துகூடபுற்றுநோய் ஏற்படக்கூடும்.

முன்னரே 1956ஆம் ஆண்டில் சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில் தான் இக்கருவி அமைக்கப்பட்டது.

இந்த ஒரே நிகழ்ச்சியிலிருந்தே எல்லாருடைய கவனத்தையும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை கவரத் தொடங்கியது.

பரவலாக நமது நாட்டு மக்கள் புற்றுநோயை ஒரு பயங்கர நோயாக எண்ணுகிறார்களே தவிர, அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள விரும்புவதில்லை.

புற்றுநோய் ஒரு பரம்பரை நோயுமல்ல. ஏதோ தனிப்பட்ட உணவினால் ஏற்படும் நோயுமல்ல; இது கொள்ளை நோயும் அல்ல.

ஈ, கொசு, புழு முதலியவற்றால் பரவும் நோயுமல்ல. தண்ணீர், காற்று, உணவு முதலியவைகளின் கிருமிகள் சேர்க்கையால் மனிதனுக்குப் பரவும் நோயுமல்ல - பெரும்பாலும் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே புற்றுநோய் வருகிறது.

இது இப்பொழுது தோன்றிய நோயுமல்ல — வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே இந் நோய் இருந்ததாக அறிகிறோம்.


துரதிருஷ்டவசமாக, இந்த நோயின் ஆரம்பத்தில் வலி ஏற்படுவதில்லை. நோயின் ஆரம்ப குணங்களும் அதிகமாக நோயாளியின் கவனத்தைக் கவருவதில்லை.


புற்றுநோய் மனித உடலில் நகம், முடி ஆகிய இரண்டு இடங்களை தவிர உடலின் எந்தப் பாகத்தில் வேண்டுமானாலும் தோன்றலாம். முதலில் வலியில்லாத சிறு கட்டியாகவோ, புண்ணாகவோ அல்லது தசை தடிப்பாகவோ தொடங்கும். சில மாதங்களில் அந்தப் பாகத்தில் எந்த விதமான நோயும் வராது. நாட்கள் செல்ல செல்ல அந்தக் கட்டி அல்லது தடிப்பு பெரிதாகும். உடலெங்கும் பரவும்.


தொடக்கத்திலேயே புற்றுநோய்க்குச் சிகிச்சைகளைத் தொடங்கினால் முழுமையாகக் குணமடையலாம். ஆனால முதலில் அலட்சியமாக இருந்துவிட்டு புற்றுநோய் என்று தெரிந்தபின்பு மிகவும் பயன்படுவது நம் மக்கள் வாடிக்கையாக உள்ளது.


அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு நாள்தோறும்சுமார் நாற்பது புதிய நோயாளிகள் சிகிச்சைக்காக வருகிறார்கள்,


முதலில் சிகிச்சைக்காக இங்குச் சேர்க்கப்படுபவர்களுக்கு ஆறு வாரங்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பழைய நோயாளிகளில் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை வந்து சிகிச்சை செய்து கொள்பவர்களாக நாள்தோறும் 100 பேர்கள் வருகின்றனர்.














புற்றுநோயில் லுக்கிமியர், லிம்போமா என இருவகைகள் உள்ளன. இந்நோய்களுக்கான எல்லாவிதமான சிகிச்சைக்குரிய கருவிகளும் இங்கே உள்ளன. ஜெர்மனி, கனடா, டென்மார்க், ஹாலந்து போன்ற நாடுகளில் உள்ள அறக்கொடை நிறுவனங்களும், உலக நல்வாழ்வை நாடும் அமைப்புகளும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கான இயந்திரக் கருவிகள் அனைத்தையும் அன்பளிப்பாகக் கொடுத்து உதவியுள்ளன.

லினிபர் அக்ஸிலேரேட்டர், பிக்கர் (Picker) டி. வி. எக்ஸ்ரே யூனிட் 'செல் செப்பரேட்டர்' என்ற பலவிதமான கருவிகளும், கோபால்ட் சிகிச்சைக் கருவிகளும் நிரம்பியுள்ள இம்மருத்துவமனைக்கு நம் நாட்டில் உள்ள முக்கியத் தலைவர்கள் அனைவரும் வருகை தந்து, இதன் பணிகளைப் பாராட்டியுள்ளனர்.

மேல்நிலை ஆராய்ச்சிப் பட்டப் படிப்புக்கு (Ph.D.) உகந்ததென இம்மருத்துவமனையைச் சென்னைப் பல்கலைக்கழகம் அங்கீகரித்துள்ளது.


புற்றுநோய் ஆராய்ச்சிப் படிப்புக்கென சோதனைக் கூடமும் இங்கே உள்ளது. அதுபோன்று புற்றுநோய் பற்றி உலகில் வெளிவந்துள்ள எல்லாவிதமான மருத்துவ நூல்களையும் கொண்ட நூலகமும் இந்த மருத்துவமனையில் உள்ளது.

ஏழை எளியவர்களுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் இலவசமாகவே சிகிச்சை அளிக்கப்படுகிறது.


மருத்துவமனை அமைந்துள்ள இடம், மிகுந்த வசதி படைத்த நிலப்பரப்பாக இல்லாததால் இப்பொழுது இம்மருத்துவமனையின் புதிய கட்டடங்களை கிண்டி பூங்கா அருகில், தமிழ்நாடு அரசு கொடுத்துள்ள இடங்களில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த வெளிநாட்டிலும் அளிக்கும் சிகிச்சைக்கு இணையாகவே சென்னை புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கிறார்கள்.

இரண்டு டாக்டர்களுடன் தொடங்கிய இம்மருத்துவ மனையில் இன்று 32 டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள் என்றாலே







இதன் வளர்ச்சியை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

புற்றுநோய்க்குத் தொடர்ச்சியான மருத்துவச் சிகிச்சை முக்கியமானதாகும். நோய் குணமாகிய பின்பும், குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் மருத்துவ சோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமாகும். அதனால் இங்கு வரும் நோயாளிகள் பற்றி ரிகார்டுகளை நன்கு கவனத்துடன் பாதுகாத்து வருகிறார்கள்.

ஒரு பழைய நோயாளி குறிப்பிட்ட காலத்தில் மருத்துவமனைக்கு வந்து பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்பதை அவருக்குத் தாங்களாகவே நினைப்பூட்டுகிறார்கள். இப்படி ஒரு பழைய நோயாளியைப் பற்றி பத்தாண்டுகள் வரை ரிகார்டுகளைக் கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

நல்ல உள்ளம் கொண்டவர்களின் உதவியாலும் ஊக்கத்தாலும் உழைப்பாலும் சிறந்துவிளங்கும் சென்னைப் புற்றுநோய் மருத்துவமனை அதன் சேவையில் உலகம் முழுவதும் தெரிந்ததாக விளங்குகிறது.

'கொடிய நோய்' என்று மக்களால் கருதப்படும் ஒரு நோய்-சிகிச்சை அளிக்க முடியாதது-என்ற எண்ணங்களை எல்லாம் மாற்றி மேலைநாட்டுக்கு இணையாக மருத்துவச் சிகிச்சை அளித்து வருகிறது!

குழந்தைகளுக்கு ஆறு மாதத்திலிருந்து கூட இரத்தத்தில் புற்றுநோய் வரக்கூடும். இதற்காக அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் குழந்தைகளுக்கு என்று தனியாக வார்டு உள்ளது. இதில் ஒரு வயது முதல் 16 வயது வரை உள்ளவர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இ ப் ப டி, புற்றுநோய்க்கான எந்தப் பிரிவினர்க்கும் தேவையான சிகிச்சைகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

பெண்களில் சிலருக்குக் கருப்பையில் புற்றுநோய் வருகிறது. மணமான பெண்களுக்குத்தான் கருப்பையில் புற்றுநோய் வருகிறது என்று ஆதாரத்துடன் விளக்குகிறார் இந்த மருத்துவமனையின் கூடுதல் இயக்குநரான டாக்டர் சாந்தா அவர்கள்.

இங்கு நோயாளிகளுக்கு அளிக்கப்படும் மருந்துகள் விலை உயர்ந்தவை ஆகும். ஏழை எளிய மக்களுக்கு அந்த மருந்துகளை இலவசமாகவே அளிக்கிறார்கள்.

இன்று இந்தியாவில் மூன்று இடங்களில் புற்றுநோய்க்கான மண்டல மையங்கள் (Regional Centres) உள்ளன. சித்தரஞ்சன், பம்பாய், சென்னை என்ற அந்த மூன்று மையங்களில் ஒன்றுதான் சென்னை புற்றுநோய் மருத்துவமனை. இதில் தான் 300 படுக்கை வசதிகள் உள்ளன. இதுவே பெரிய புற்றுநோய் மருத்துவமனையாகவும் விளங்குகிறது.

இந்திய மாதர் சங்கத்தின் சார்பில் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனை, ஆல் போல் தழைத்து மக்கள் நல்வாழ்வுக்கு பெரும்பணியாற்றும் ஆலயமாகத் திகழ்கிறது.

—மாமூலன்.




தருமபுரி மாவட்டத்தில் ரூ.12 கோடி செலவில் பல சிறப்புநீர்ப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.மேலும், ரூ. 16 கோடி செலவில் பல்வேறு நீர்ப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கிறது. இதன் மூலம் 40,000 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்.

பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 8,000 ஏக்கரில் முசுக்கொட்டைச்செடி பயிரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 50,000 பேர்வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள்.

ஐந்து நூற்பாலைகள் தனியார் துறையாலும், ஒரு நூற்பாலை கூட்டுறவுத் துறையாலும் உருவாக்கப்படவிருக்கிறது.

தருமபுரி பொம்மிடியைச் சுற்றிலும் 240 தீப்பெட்டி சிறு தொழிற்சாலைகள் ரூ. 2½ கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் 2800 பேருக்கு 4600 ஏக்கர் நிலம் ஒப்படைசெய்து தரப்பட்டுள்ளது.

மாதந்தோறும் 80,000 லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விநியோகம் சீராக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 13 சில்லரை வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

சர்க்கரை 300 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டு கூட்டுறவு அங்காடிகள் மூலமும், கூட்டுறவுத்துறை மூலமும் குடும்பக்கார்டுதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ரூ. 37,000 செலவில் 115 சலவைத் தொழிலாளிகளுக்கும்,110 சவரத் தொழிலாளிகளுக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சாமியாபுரத்தில் ரூ. 45,000 செலவில் நரிக்குறவர் பிள்ளை கட்குப் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டப்படுகின்றது. 30 நரிக்குறவர்களுக்கு ரூ. 1,29,000 செலவில் கட்டடங்கள் சாமியாபுரத்தில் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிவாசிகள் 50 பேருக்குத் தொழில் கருவிகள் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.11400 செலவில் உழவுமாடுகள், விவசாயக் கருவிகள், ஆதிவாசிகள், அரிஜனங்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

கலப்புத் திருமணம் செய்து கொண்ட 5 தம்பதியர்களுக்குத் தங்கப்பதக்கமும் தலா ரூ. 200; 3 விதவை மறுமணத்தம்பதியர்களுக்குத் தலா ரூ. 5,000 வீதம் ரூ. 15,000 வழங்கப்பட்டுள்ளது.

அரிஜனக் காலனிகளுக்கும், இடுகாட்டிற்கும் பாதைகள் ரூ. 1,35,000 செலவில் போட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. அரிசனங்களுக்குக் குடிநீர் வசதிக்காக ரூ. 50,000 செலவிடப்பட்டுள்ளது.

மலைவாழுநர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சித்தேரி, சிட்டிலிங்கி மலைவாழுநருக்கு ரூ. 27 இலட்சம்செலவில் பல்வேறு சிறப்புத்திட்டங்கள் நடப்பாண்டில் நிறைவேற்றப்பட்டு உள்ளன. அடுத்த நிதியாண்டில் ரூ. 40 இலட்சம் செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 37 இலட்சம் செலவில் 2700 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது. இதற்காக 3,700 டன் அரிசி விநியோகிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 2,75,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

**தருமபுரி வனக் கோட்டத்தின் வளர்ச்சிப் பணிகள்**

தருமபுரி வனக்கோட்டத்திற்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1030 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் பணிக்காக ரூ. 7,97,800 நடப்பாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதுகாறும் 1017 எக்டேர் பரப்பில் ரூ. 6,04,000செலவில் தோட்டங்கள் உற்பத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் புளியந்தோட்டம் 123.6 எக்டேர் பரப்பிலும், கிராம நலக்காடுகள் 660 எக்டேர் பரப்பிலும், சிவப்பு சந்தன மரங்கள் 106.4 எக்டேர் பரப்பிலும், சந்தன மரங்கள் 26 எக்டேர் பரப்புலும், மூங்கில் தோட்டம் 101 எக்டேர் பரப்பிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் விற்பனைக்காக ரூ. 18,000 செலவில் 70,000 பலவகை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கோட்டப்பட்டி காப்புக் காட்டில் ரூ. 14,438 செலவில் 48 எக்டேர் பரப்பில் மூங்கில் தோட்டம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 78.24 எக்டேரில் பயிரிட உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுகள் மலைவாழ் மக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன.

வறட்சிக்கு இலக்காகும் பணித் திட்டத்தின் கீழ் 500 எக்டேர் பரப்பில் காடுகளில் நெருக்கமாக காடுகள் வளர்க்க ரூ. 3,31,000 காடுகள் இல்லாத மலைக்குன்றுகளில் 200 எக்டேரில் காடு வளர்க்க ரூ. 2,16,000; 200 எக்டேரில் காட்டுத் தோட்டம் போட ரூ. 88,000; 35 கி.மீ. நீளமுள்ள சாலை ஓரங்களில் மரம் நட ரூ. 1,52,261; 10 நீர்க்குட்டைகள் அமைக்க ரூ. 50,000; 9 இடங்களில் நாற்றங்கால் அமைக்க ரூ. 50,000; தனியார் நிலம் 50,000 எக்டேரில் காடு வளர்க்க ரூ. 10,000; 275 எக்டேர் பரப்பில் புல் தரை வளர்க்க ரூ. 5,53,000; நிர்வாகச்செலவிற்காக ரூ. 1,41,314 ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.









# நம்பிக்கை ஒளி ஏற்றுவோம்

எஸ். மரகதவல்லி

அன்னநடை கன்னல்மொழி அழகு கொஞ்சும்
அன்புமுகம் பண்புமனம் அருளின் சேர்க்கை
சின்னவிழி சித்திரம்போல் சிறந்த மேனி
சிரிப்பதனைச் சிந்திவரும் பவளச் செவ்வாய்
வண்ணஎழில் பிறைநெற்றி வையம் எல்லாம்
வாய்பிளந்து 'அடடாவோ' எனவி யக்கும்
கன்னியிளம் பருவமயில் இன்னும் இங்கே
கன்னியென வாழ்கின்றாள் கண்ணீர் பொங்க!

அன்னையுண்டு தந்தையுண்டு அத்தை யுண்டு;
அருள்மிகுந்த பாட்டனுண்டு பாட்டி யுண்டு
அண்ணனுண்டு தம்பியுண்டு அவளின் வீட்டில்
அடுக்கடுக்காய்த் தங்கையர்கள் மெத்த உண்டு
எண்ணரிய சுற்றத்தார் நிறைய உண்டு;
எவரிருந்தும் என்னபயன் நேர்ந்த துண்டு?
கன்னியிளம் பருவமயில் இன்னும் இங்கே
கன்னியென வாழ்கின்றாள் கண்ணீர் பொங்க!

கல்வியுண்டு; திறமையுண்டு; கனிவும் உண்டு
கல்லூரித் தேர்வினிலே முதல்வி என்ற
சொல்லுமுண்டு; பாராட்டு வார்த்தை எல்லாம்
தொகைதொகையாய்ச் சேர்வதுண்டு; மேடைப் பேச்சில்
வெல்லுகின்ற அறிவுண்டு; ஆற்றல் உண்டு;
விதவிதமாய்ப் பரிசுகளைப் பெறுவ துண்டு;
சொல்லரிய சிறப்பெல்லாம் குவிந்தும் இங்கே
தூயமகள் வாழ்கின்றாள் கண்ணீர் பொங்க!

வரமெல்லாம் பெற்றிருந்தும் வஞ்சி அன்னாள்
வரன்ஒன்று காணாமல் தவிக்கின் றாளே!
''வரனுக்குத் தட்சணையை வழங்கு தற்கே
வளமற்று வாழ்கின்ற ஏழைக் கன்னி



வரன்தேடல் முறைதானா? நியாயம் தானா?
மணவாழ்வு அவளுக்கேன்? தேவை தானா?''
மரம்போலும் இயல்புடையார் இவ்வா றாக
மதிக்கின்றார் பெண்ணினத்தை, இரக்கம் இன்றி!

அரசென்னும் மரத்திற்கு வேம்பு தன்னை
ஆளனென ஆக்குகின்றார்; இந்த நாட்டார்
முரசெல்லாம் கொட்டுகின்றார்; விருந்து கூடப்
படைக்கின்றார் பெருமளவில்; விழாக்காண் கின்றார்;
சிரசையாட்டி மகிழ்கின்றார்; புண்ணி யங்கள்
சேருமென்றே நம்புகின்றார்; ஏழைப் பெண்டிர்
சரஞ்சரமாய் வடிக்கின்ற கண்ணீர் வெள்ளம்
துளியேனும் போக்குதற்கு முயன்றால் என்ன?

தாயென்றும் தேவியென்றும் திருமா தென்றும்
தரந்தரமாய்ச் சொல்லெல்லாம் எடுத்துக் கோத்து
வாயெல்லாம் மகிழ்ச்சியுறப் பேசு கின்றோம்;
வனிதையரின் மணவாழ்வில் காசைத் தேடிப்
பேயெனவே திரிகின்றோம்; ஆசை தன்னில்
பெருங்கடலாய் மாறுகின்றோம்; இந்தக் கேடு
போயொழியச் செய்வதற்கே இளைஞர் எல்லாம்
புறப்பாட்டுப் போர்வீரர் ஆதல் வேண்டும்!

நம்நாட்டின் பெருமைக்கே இழுக்குத் தேடும்
நச்சுமனப் போக்குக்கே விடிவு காண்போம்!
நம்பிகளே! நங்கையரே! நினைவிற் கொள்வீர்,
நாடெல்லாம் நோய்படர்ந்தால் கேடே அன்றோ?
தும்பிகளாய்ப் பாடிடுவோம்! தீமை போக்கத்
துடித்தெழுந்து பணிபுரிவோம்; பெண்டிர் நெஞ்சில்
நம்பிக்கை ஒளிஏற்றச் சூளு ரைப்போம்!
நல்லெண்ணத் தூதுவராய் நாமு ழைப்போம்!

# குறைந்த வருமானமுள்ள வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் கடன் நிவாரண நடவடிக்கை

## "கிராம மக்களின் கடன்சுமை நீக்கப்படும்" என்பதே 20-அம்சத் திட்டத்தின் 5வது பகுதியின் நோக்கம்

இந்த உறுதிமொழியை நிறைவேற்ற 1976-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப் பட்டது. இச்சட்டத்தின் விதிமுறைகளை மேலும் எளிதாக்கி, கிராம ஏழை மக்கள் மேலும் பயனடைய வேண்டுமென்ற கருத்திலும் உடனடி நிவாரணம் விரைந்து கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் 1980-ம் ஆண்டு இச்சட்டத்தின் விதிமுறைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் யார்?

நீங்கள்...

1) 31-12-1975-ல் முடிவடைந்த ஆண்டில் மொத்த குடும்ப வருமானம் ரூ 2400க்கு உட்பட்ட ஒரு வேளாண்மைத் தொழிலாளியா? கைவினைஞரா?
2) இரண்டு யூனிட்டுக்கு உட்பட்ட நிலமுள்ள மலைவாழ் மக்களினத்தைச் சேர்ந்த சிறு விவசாயியா?
3) ஒரு யூனிட்டுக்குட்பட்ட நிலமுள்ள இதர சிறு விவசாயியா?

மேற்கூறியபடி நீங்கள் இருந்தால் உங்கள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெற இச்சட்டத்தின் மூலம் தகுதி பெறுகிறீர்கள்.

இந்த நிவாராணச் சட்டத்தின்படி 29-7-76க்கு முன்பு நீங்கள் செலுத்த வேண்டிய வட்டி உட்பட கடன் தொகை முழுவதும் செலுத்தி விட்டதாகக் கருதப்படும்.

இச்சட்டத்தின் விதிமுறைகளை தாசில்தார்கள் செயல்படுத்துகின்றனர்.

இச்சட்டத்தின்படி தகுதி பெற்றவராயின் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?


இச்சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து நீங்கள் வசிக்கும் பகுதியின் அதிகார வரம்புள்ள தாசில்தார், துணைதாசில்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் (பி.டி.ஓ) கூட்டுறவு சார்பதிவாளர்—இவர்களில் ஒருவர் முன் பிரமாண வாக்குமூலம் செய்து வருமான அல்லது நில உடைமைச் சான்றிதழுடன் உங்கள் பகுதியைச் சேர்ந்த தாசில்தாருக்கு 12-6-1980க்குள் கொடுத்து விட வேண்டும்.

பக்கத்திலுள்ள சம்பந்தப்பட்ட தாலுக்கா அலுவலகத்திற்குச் சென்று, நீங்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். உடனடியாக நிவாரணம் பெறுவதற்கான படிவங்களைக் காலதாமதமின்றி பூர்த்தி செய்து கொடுத்து விடுங்கள்.

**உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடுங்கள்.**

**மனு அளிக்கக் கடைசி நாள் 12-6-1980**

வருவாய்த்துறை



இனிய வாழ்வு
எய்திட
**20**
அம்சத் திட்டம்

தீயணைப்புப் பணி நாள் (14-4-'80)

# தீ விபத்து

**இல. முனிவேலு**
**தலைவர்**
**தென்னக இண்டேன் விநியோகிப்பாளர் சங்கம்**

விறகு (Wood), நிலக்கரி (Coal), மண்ணெண்ணெய் (Kerosene) மின்சாரம், எரிவாயு (L.P.G.) மற்றும் பல எரிபொருட்கள் எரியும்போது வெப்பத்தை வெளிப்படுத்துகின்றன.

அவை கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் எரியும்போது வெளிப்படும் தணல் அல்லது வெப்பம் பயனுள்ள முறையில் அல்லது நல்லனவற்றுக்குப் பயன்படுத்த முடியும்.

ஆனால், கட்டுப்படுத்தப்படாமல் அல்லது கவனிப்புக் காளாகாது எரியும்போது சில சமயங்களில் விபத்துக்களும் அதன் காரணமாக ஆபத்துகளும் ஏற்படும்.



விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஆதாரமே போதிய கவனமின்மை (கவனக் குறைவு) அளவுக்கு மீறிய தன்னம்மிக்கை (அலட்சியப்போக்கு), விபத்துக்களின் விளைவால் ஏற்படும் பேரிழைப் பற்றிய கவலை சிறிதுமின்மையுமேயாகும்.

**பாதுகாப்பு-வழிமுறை**

கடும் விபத்துக்களின் காரணமாக உயிருக்கும் உடமைகளுக்கும் ஆபத்து நேரிட்டு பேரிழப்புகளுக்கு ஆளாகித் தொல்லைப்படுகிறோம். விபத்துக்களினால் உயிரும் உடைமையும் இழப்பதோடன்றி பயன்படுத்தப்படும் எரிபொருள், அதைத் தயாரிப்போர், விநியோகிப்போர் மீதும் 'நல்லெண்ணமிழப்பு' சமுதாயத்தில் ஏற்படும். விபத்துக்கள் நேரா வண்ணம் காத்துக் கொள்வது என்பது சற்று இயலாத காரியமாயினும், விபத்துக்கள் நேருவதைத் தவிர்க்கவாவது நாம் முயற்சி செய்யலாம். ஆகவே, விபத்து ஏற்படாவண்ணம் முன்கூட்டியே தடுத்துக் கொள்ளும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றியும், விபத்து ஏற்பட்டால் அதிலிருந்து மீளுவதற்குகான செயல் முறைகளைப் பற்றியும் பொதுவாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுதல் அனைவருக்கும் நல்லது.

எரிபொருட்களின் தரத்தைக் காக்க வேண்டியது உற்பத்தியாளர்களின் கடமையாகும்; அவற்றைச் சீரான, செம்மையான முறையில் விநியோகப்பது விநியோகிப்பாளரின் பொறுப்பாகும்.

இருப்பினும், எரிபொருள் பயன்படுத்தும்போதும், அவற்றுடன் இணைந்த சாதனங்களை வாங்கும்போதும், நுகர்வோர் சற்று விழிப்புடன்-தரமானதாக முடிந்தால், அங்கீகரிக்கப்பட்ட சாதனமாக வாங்கினால் நல்லது. ஏனெனில் அங்கீகரிக்கப் பட்ட சாதனங்கள் எப்பொழுதுமே சில தரக்கட்டுப்பாட்டிற்குட் பட்டு - பரிசோதனைகளுக்குட் பட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கும்.

**அணைக்கும் வழிகள்:**

விறகு அல்லது நிலக்கரி எரியும்போது தணல் கட்டுப்படுத்த முடியாத அளவில் கொழுந்து விட்டு எரிந்து, எழும் புகை மண்டலத்தைத் தண்ணீர் மூலம் கட்டுப்படுத்தி விடலாம்.

மின்சாரக் கசிவையும் (Leakage), அதிர்ச்சியையும் (Shock) மின்சார இணைப்பைத் துண்டிப்பதன் மூலம் தவிர்த்து விடலாம். ஆனால், எரிவாயு பற்றி எரிந்து பரவும்போது, தண்ணீர் ஊற்றி

அணைக்க முயற்சிக்கக் கூடாது. அதற்குப் பதில் தீத்தடுப்புச் சாதனங்களைப் பயன்படுத்திக்கட்டுப்படுத்த வேண்டும்.

எரிவாயுவில் கார்பன் மானாக்சைடு இல்லாத காரணத்தால் நச்சுத்தன்மை கிடையாது என்பது தத்துவம். ஆனால் , பொதுவாக நீண்ட நேரம் அதிகமான எரிவாயுவை சுவாசிக்கும்போது மயக்கமோ அல்லது வயிற்றுக் கோளாறு அல்லது தலைவலி கூட ஏற்படலாம்.

**விபத்துக்கள் — காரணங்கள்**

விபத்துக்கள் தானாக ஏற்படுவதில்லை. அவைகள் விளைவிக்கப்படுகின்றன.

பொதுவாக விபத்துக்கள் மின்சாரமாகவோ அல்லது எரிவாயுவாகவோ இருந்தால் கசிவு மூலம் ஏற்படும். விறகு அல்லது நிலக்கரி தணல் கட்டுப்படுத்தப்படாதது. எல்லா வற்றையும் எரி வாயு சிலிண்டர்களில் திரவமாக அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. கசிவு ஏற்பட்டாலும், அருகில் நெருப்பு இருந்தாலொழிய விபத்து ஏற்படுவதற்கு வழியில்லை. மற்றெல்லா எரி பொருட்களை விட எரிவாயுவின் தன்மைகள் சிறப்பானதாகவும் விபத்துத் தன்மைகுறைந்து காணப்பட்டாலும், இவைபொது மக்களுக்கு பரவலாகக் கிடைக்கவில்லை.

எரிவாயு (L.P.G.) தூய்மையானது; பாதுகாப்பானது; எளியது; புகையில்லை, கரிபடிவதில்லை; சமையலறை எப்போதும் தூய்மையாக இருக்க உதவுகிறது; கட்டுப்படுத்தக் கூடிய ஒரே செந்தணலால் சமை



யலை விரைவில் முடிக்கலாம்; உருள் கலனில் தூய்மையாக, இலேசாக, வசதியாக வாயு கிடைக்கின்றது; உடனடியாக உங்கள் வீட்டிற்கு அனுப்பப்படுகின்றது; எடுத்துவரக் கட்டணம் கிடையாது, சிக்கனமான, ஆனால் சுகமான வாழ்வுக்காகத் தயாரிக்கப்பட்டது. மற்றஎல்லா எரிபொருட்களை விட சிறப்பான இந்த எரிவாயுவால் ஏன் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்கின்றன?

முன்பே குறிப்பிட்டபடி, எரிவாயு விபத்துக்கள் நிகழ்வதற்கு ஏதுவாக இருப்பவை, வாயுக் கசிவும், பக்கத்திலுள்ள தணல் கொழுந்துமேயாகும்.

இவை இரண்டுமே அருகருகே இருப்பதனாலேயே விபத்துக்கள் ஏற்படுவதில்லை; கவனக் குறைவால் ஏற்படும் வாயுக் கசிவும் அருகிலுள்ள எரிந்து கொண்டிருக்கும் தணலுமே விபத்துக்கு மூல காரணமாகும்.

**வரல்வுகள் கவனியாமை**

ஆகவே, வாயு சிலிண்டர்களைக் சுழற்றி மாட்டும் போது



அருகில் எரியும் தீச்சுடரில்லாமல் பார்த்துக்கொள்ளவது மிக மிக அவசியம்.

சிலிண்டர் வால்வு (Cylinder Valve), வாயுக்கசிவு சரியாக மூடப்படாமலிருக்கும் வகையில் பாதுகாப்பு (Security Over) மரையைக் கழற்றும்போது— அல்லதுரெகுலேட்டரை (Pressure Regulator)க் கழற்றும்போது வெற்றுச் சிலிண்டரின் வால்வை சரியாக மூடாமல் அல்லது மரையைச் சரியாகப் பொருத்தாமலிருக்கும்போது—

சிலிண்டரைச் சரியாக வைக்காமல் அல்லது சிலிண்டரைப் பக்கவாட்டில் படுக்க வைக்கும்போது.

அடுப்பினிறுதியிலுள்ள குழாய் முனையில் ரப்பர் குழாயினைச் சரியாக இறுக மூடாமலிருக்கும் போது—

வெற்று அல்லது வாயு உள்ள சிலிண்டரைத் தூக்கிவைக்காமல்





வால்வினைப்பற்றி தரதரவெனத் தரையில் இழித்துச் செல்லும் போது—

எலிகடித்த, பற்றி எரிந்த, நசிந்த ரப்பர் குழாய்களை மாற்றாமல் பயன்படுத்தும்போது —

அடுப்புச் சானதங்கள் சரியாக இயங்காதபோது—

ரெகுலேட்டரில் உள்ள ரப்பர் இணைப்புகளை உரிய காலங்களில் புதுப்பிக்காதபோது—

ரப்பர் குழாயின் மீது படியும் உணவு வகைகளை அகற்றி சுத்தமாக வைத்திருக்காத போது எலிகள் கடித்து கசிவு ஏற்படும் போது—

சிலிண்டர் வால்வுகளை முரட்டுத்தனமாக அடித்து மூடவோ திறக்கவோ செய்யும் போது—

அங்கீகரிக்கப்படாத ரப்பர் குழாயினைப் பயன்படுத்தும் போது—



புத்தம் புது சிலிண்டர்களை இணைக்கும்போது 'கசிவு' பற்றிக் கவனிக்காமலிருக்கும்போது—

எரியும் குமிழ்களிடையே ரப்பர் குழாய்கள் (சரியாக இணைக்கப் படாமலிருந்தால்) பிடுங்கிக் கொள்ளும் பொழுது—

எரியும் அடுப்புக் குமிழ்களின் மீது உணவுப்பண்டங்கள் விழுந்து அடைத்துக் கொண்டால் சிலிண்டர் வால்வினை மூடாமல் சமையல் செய்யும் போது—

தீக்குச்சி பற்ற வைப்பதற்கு முன்பே அடுப்புச் சாதனங்களை திறக்கும்போது—

இரவில் சமையல் முடிந்த பின்பு சிலிண்டர் வால்வு மூடா

மல் அடுப்புச் சாதனமும் மூடப் படாமலிருக்கும்போது—

சிலிண்டரையும் அடுப்பையும் சரிபார்க்கத் தெரியாத நுகர்வோரே சரிபார்க்க முயற்சிக்கும் போது—

பொதுவாக வாயுக் கசிவு (Leakage) ஏற்படலாம்.

வாயுக்கசிவு மட்டுமே இருந்தால் தீ விபத்து ஏற்படாது; அருகில் தீச்சுடர் இருந்தால் தான் தீ விபத்து ஏற்படும். எனவே அருகில் தீச்சுடர் அல்லது எரியும் தீக் கொழுந்து இல்லாமல் பார்த்துக் கொள்வது மிக மிக அவசியம். இத் தீச்சுடர்கள் பலவாக இருக்கலாம்.

—லாந்தர்கள், எரியும் மெழுகு வர்த்தி, எண்ணெய் விளக்கு, கொதிக்கும் நீர், கொதிக்கும் எண்ணெய், மண்ணெண்ணெய் அடுப்பு—

அடுப்புச் சாதனத்தின் குமிழ்களைத் திறக்கும் முன்னரே தீக் குச்சியைப் பற்ற வைக்க வேண்டும்.

நைலான் போன்றசேலைகளை அணிந்து கொண்டு சமையல் செய்யும் போது பற்றி எரிந்து கொள்ளும் ஆபத்தும் உண்டு.

சிலிண்டர் கழற்றி மாற்றும் போது புகை பிடித்தல் சரியன்று.

சிலிண்டர், தீ விபத்தின்போது வெடிப்பதில்லை. அதிலுள்ள எரிவாயு, நெருப்பு இருக்கும் வரையில் தொடர்ந்து எரிந்து கொண்டேயிருக்கும் காற்றின் வேகத்தில் பரவும். அவ்வளவுதான்.

சிலிண்டரில் ரெகுலேட்டர் இருக்கும்போது பற்றிக்கொண்டால் தீயின் வேகம் குறைவாக இருக்கும். சிலிண்டரிலிருந்து நேரடியாக வாயு வெளியேறி தீப்பிடித்துக் கொண்டால் தீயின் தணல், வேகம் மிகவும் கடுமையாக இருக்கும்.

இவைதவிர, பின்னருள்ள படியும் தீ விபத்து ஏற்படலாம்: குழந்தைக்கும் பாலூட்டிக் கொண்டிருக்கும் தாய் தரையின்மீது சமைத்துக்கொண்டிருக்கையில், திடீரெனத் தண்ணீர் எடுக்க எழுகையில் முந்தானை தீச்சுடரில் பற்றி எரிய ஆரம்பிக்கும்.

**காரணங்கள்**

ஃ பளுகாரணமாக, விநியோகம் செய்யும் பையன் தூக்கமுடி



யாமல், சிலிண்டர் கீழேவிழுந்து விடுகின்றது; உடனே மூடியிருக்கும் பாதுகாப்பு உறை உடைந்து வால்வு கழன்று வாயு மிக அழுத்தத்தில் வேகமுடன் வெளியேற ஆரம்பிக்கிறது. அந்த சமயம் பூஜை விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருக்க, எரியும் சுடரும் வெளியேறிய வாயுவும் இணைந்து தீ பரவ ஆரம்பிக்கின்றது.

ஃ நுகர்வோர் (வாடிக்கையாளர்) விநியோகிப்பாளரிடமிருந்து தானே சிலிண்டர்பெற்று வருகிறார். (பொதுவாக சிலிண்டரை நுகர்வோர் எடுத்துச் செல்ல விநியோகிப்பாளர் அனுமதிக்கமாட்டார்.) வால்வு திறப்பதற்குச்சற்றுக்கடினமாகஇருப்பதால் ஆயுதத்தைப் பயன்படுத்தி தலையில் ஓங்கி அடிக்கிறார். அதற்குள் வால்வு கழன்று, பாதுகாப்பு உரையும் உடைந்து,வாயு கசிய ஆரம்பிக்கிறது. எதிர் வீட்டுக்காரரைத் துணைக்கு அழைத்து ஒருவழியாக வால்வை மூடுகிறார். காற்றைவிடக் கனமாக இவ்வாயு இருப்பதால் கசிந்த வாயு அறையைவிட்டு வெளியேறாமல் நிலத்தளவில் பரவி நிற்கிறது. வீட்டுக்காரர் தீக்குச்சியினைப் பற்ற வைக்கிறார். தீ 'குப்'பென்று பற்றி விபத்தை விளைவிக்கின்றது.

ஃ விநியோகம்செய்யும்பையன் எரிந்து கொண்டிருக்கும் மண்ணெண்ணெய் அடுப்பை அணைக்கும்படி சொல்கிறான். அம்மையார் 'சரி அணைக்கிறேன்' என்று சொல்லி அறைக்கதவை மூடிக் கொள்கிறார். சரி அணைத்துவிட்டார்களென நம்பி, முழுசிலிண்டரின் வால்வைத் திறக்கையில் சிலிண்டர் பரிகள் (Threads) இடக்கு செய்கையில்ஸ்பேனரால் அதைத் தட்டுகிறான். பாதுகாப்பு உறை கழன்று வாயு கசிய ஆரம்பிக்கின்றது. அதற்குள் அடுப்பை அணைக்காமலேயே அம்மையார் அறைக் கதவைத் திறக்கின்றார். 'குபீர்' என்று தீ பற்றி விடுகின்றது.

ஃ மாலை நிகழ்ச்சிக்கு அழகான நைலான் சேலையணிந்து தயாராகிக் கொண்டிருக்கிறார் இல்லத்தரசி. கணவர் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் அவருடன் புறப்படவேண்டும். கணவர் வந்தவுடன் தேநீர் கேட்கிறார். அவ்வுடையை மாற்றாமல் அவசரமாக அடுப்பைப் பற்ற வைக்கிறார். அடுப்பின் மேல் மட்டத்துள்ள சர்க்கரை டப்பாவை எடுக்க எத்தனிக்கும்போது நைலான் சேலை முந்தானை பற்றி சில நொடிகளுக்குள் கருக ஆரம்பிக்கிறது.

ஃ இரவு அடுப்பு வேலை முடிந்தவுடன் ரப்பர் குழாயின் மீது படிந்த சாம்பாரினைத் துடைத்துவிட மறந்து விடுகிறார் இல்லத்தரசி. இரவு எலி அதனைச் சுவைத்து துளையேற்படுத்திவிடுகிறது. மறுநாள் காலை அம்மையார் அடுப்பைப் பற்ற வைத்தவுடன் வாயுக்கசிவினால் தீப் பற்றி எரிய ஆரம்பிக்கிறது.





ஃ சமையலறையில் ‘கியாஸ்’ அடுப்பில் பால் கொதித்துக் கொண்டிருக்கிறது. அருகிலுள்ள மண்ணெண்ணெய் அடுப்பில் சோறு வெந்து கொண்டிருக்கிறது. அழும் குழந்தையைச் சமாதானப் படுத்த தாய் முற்றத்துக்கு கைக் குழந்தையுடன் சென்று விட்டு வருகிறார். வருவதற்குள் பால் பொங்கி வழிந்து அடுப்பின் எரியும் குமிழை அடைத்து விடுகிறது. வாயு மட்டும் வெளியேறிக் கொண்டேயிருக்கிறது. வெளியேறிய வாயு மண்ணெண்ணெய் அடுப்பைத் தொட்டவுடன் தீப் பற்றி எரிந்து விபத்தை உண்டாக்குகின்றது.

பள்ளிக்குசென்ற குழந்தையை அழைத்து வர மதிய வேலையை முடித்து விட்டு, சமையல் ஜன்னல்கள் கதவையெல்லாம் இறுக மூடி வெளியேறுகின்றார் அம்மையார். ஆனால் சிலிண்டர் வால்வினையும் அடுப்புக் குமிழ்களையும் மூடமறந்து விட்டார். திரும்ப வருவதற்குள் அறையில் நிரம்பி வழிகின்றது வாயு. எல்லாம் மூடப்பட்டிருந்ததால் வெளியேற வழியில்லை. குழந்தைக்குப் பாலூட்ட பால் காய்ச்ச சமையலறைக்கு விரைகிறார். ஜன்னல்கள் எதையும் திறக்க முயற்சிக்கவில்லை. வாயுவின் நெடியினையும் சட்டை செய்யவில்லை. குழந்தையின் தொல்லை, இவற்றையெல்லாம் கவனிக்க விடவில்லை. தீக்குச்சியினைப் பற்ற வைக்கிறார். திடீர் ‘தீ’! பின்பு அவ்வளவு தான்..........

**மிக முக்கிய அறிவிப்பு:**

திரவ வடிவாக்கிய பெட்ரோலியம் வாயுவை - குக்கிங் காஸ் என்கிறோமே? அதனைக்-கட்டுப் படுத்தி வைத்துக்கொள்ள தவறினோமானால் பேராபத்து விளையும். இதைத் தவிர்ப்பது எப்படி? உபயோகத்திலில்லாத சிலிண்டர் வால்வையும், பர்னர் குமிழ்களையும் இறுக மூடிய நிலையில் வைத்துக்கொள்வதே உறுதியான வழி.

சொந்தமாகப் பழுது பார்த்திடும் சூரர்களை நம்ப வேண்டாம்! ஸிலிண்டரைக் கோப்பதற்கும், கழற்றுவதற்கும் தொழில் நுட்ப வல்லுநர்களை நம்புவதே நல்லது. ஸிலிண்டர் வால்வோ பிரஷ்ஷர் ரெகுலேட்டரோ, பர்னரோ எதைச் சரியமைப்பதானாலும் பழுதுபார்ப்பதானாலும் இதுவே முறை. எப்பொழுதும் சரி, வினியோகிப்பாளரை வரவழைக்கவும்!

வாண வேடிக்கை காணத் தமாஷாயிருக்கும். ஆனால் அதுவே சமையலறையில் நடந்தாலோ வந்தது மோசம்! ஸிலிண்டரோடு பர்னரை இணைத்திடும் வளை குழாயை அலட்சியம் செய்தோமானால் அது நேர்ந்துவிடும். ரீஃபில் இணைக்கப்படும் ஒவ்வொரு தடவையும் வளை குழாயைப் பரிசிலித்து, பழுது ஏதேனும் தென்பட்டால் அக்கணமே மாற்றுறுப்புப் போட்டுவிடவும்.

ரீபில் ஸிலிண்டர் இணைக்கப் படும்போது, சிகரெட் பற்ற வைப்பதைக்கூடத் தவிர்த்தாக வேண்டும் பெருந் தீ விளையாதிருக்க, இணைப்பு நடைபெறும் போது எல்லா நெருப்புகளையும் அணைத்துவிடவும்.

உங்கள் வீட்டிலே தீ விபத்து நேருவதைத் தடுக்கவேண்டுமானால் செய்ய வேண்டியவை. செய்யக் கூடாதவை என்னென்ன என்பதற்கான முக்கியவிதிகள் இதோ:

<u>செய்ய வேண்டியவை:</u> உபயோகத்திலில்லாதபோது ஸிலிண்டர் வால்வையும், பர்னர் குமிழ்களையும் மூடிய நிலையில் வைத்துக்கொள்க.

ரீபில் ஸிலிண்டரை இணைத்திடும்போது எல்லா நெருப்புக்களும் அணைக்கப்பட வேண்டும்.

ஸிலிண்டரை இணைத்தான பின், ரெகுலேட்டர் இணைப்புகளின் இணைப்புறுதியை சோப்பு நீரினால் பரிசோதிக்கவும்.

ஸிலிண்டர் வால்வுகளைத் திறக்க, கைத்திருகு சக்கரத்தை இடச்சுற்றாக அரை வட்ட அளவுக்கு இலேசான அழுத்தத்துடன் திருப்பினால் போதும்.

மூட்டுவதற்கெனக் குமிழைத் திருப்புமுன்னமே, பற்ற வைத்த தீக்குச்சியை பர்னரில் காட்டவும். ரீஃபில் இணைக்கப்படும் ஒவ்வொரு தடவையும் வளைகுழாயின் நிலையைப் பரிசீலித்துத் துப்புரவாக வைத்துக்கொள்க.

<u>கூடாதவை:</u> ஸிலிண்டரைபடுக்க வைக்கக் கூடாது.

ஸிலிண்டரை நீங்களாகவே கழற்றவோ, மாற்றவோகூடாது; வீடு மாற்றும் போதோ, கழற்றி மாற்றும் வேலைகளை உங்கள் வினியோகிப்பாளரிடம் விடுங்கள்.

ஸிலிண்டர் வால்வுகள் பிரஷ்ஷர் ரெகுலேட்டர், பர்னர், எதனையும் நீங்களாகவே சரியமைக்கக்கூடாது.

ரெகுலேட்டரிலிருந்தோ பர்னரிலிருந்தோ வளை குழாயை இழுக்கக் கூடாது. மீறினால் விபத்து நேரிடக்கூடும்.

சூடெழும் இடத்தின் அருகே வளைகுழாயை வைக்கக்கூடாது.



# ஆட்சிமொழி அளிக்கும் நகைச்சுவை நறுக்குகள்


கோ. முத்துப்பிள்ளை,
உறுப்பினர்,
ஆட்சிமொழி ஆணையம்,
தமிழ்நாடு அரசு.


ஆட்சிமொழி வகுப்புகளை நடத்தி வந்த பட்டறிவு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும் என்று தான் சொல்ல வேண்டும். இடையிடையே, சில நாட்கள் கழித்து வகுப்புத் தேர்வுகளை நடத்துவது வழக்கம். இத்தகைய தேர்வுகளில் நண்பர்கள் தந்த விடைகள் மிகவும் சுவையானவை. Howlers என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். பெரும் பிழைகளாக அமைந்த விடைகளை Howlers என்று சொல்வது வழக்கம். இவை, பெரும்பாலும் வெடிச் சிரிப்புகளை வரவழைக்கும் விடைகளாக அமைவதைக் காணலாம். Howlers என்றால் ''வெடிச்சிரிப்பு விடைகள்'' என்று கூடச் சொல்லத் தோன்றுகிறதல்லவா?

### தலை எழுத்து:

''முருகனின் கையெழுத்து முத்துப்போல் இருக்கும்'' என்று சொல்கிறோம். ''கையெழுத்து'' என்பது ஆங்கிலத்தில் Hand-writing என்று சொல்லப்படுகிறதென்பதைத் தெரிந்து கொள்கின்றோம். ''முருகன் கையொப்பமிட்டான்'' என்று சொல்வதாக வைத்துக்கொண்டால், ''கையொப்பம் என்பது Signature என்று தெரிந்து கொள்கின்றோம். ''இவை முருகனின் Initials'' என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். இதற்குரிய மொழிபெயர்ப்பை அறிந்துகொள்ள அகராதியைத் தான் புரட்ட நேரும்! இதற்குரிய தமிழாக்கம் ''சுருக்கொப்பம்'' என்பதுதான். சுருக்கமான ஒப்பந்தான் சுருக்கொப்பம் என்றாகியுள்ளது. வகுப்புத் தேர்வில் நண்பர் ஒருவர் எழுதிய மொழி பெயர்ப்பை இப்போது சொல்லி விடுகின்றேன். அது ''தலை எழுத்து'' என்பதாகும்! வகுப்புக்கு வருவதும், பின்னர் தேர்வு எழுதுவதும் அவருடைய தலையெழுத்து போலும்! ''தலைப்பு எழுத்து'' என்ற ஒரு மொழி பெயர்ப்பும் உண்டு. அதைப் படித்த நண்பர் வழுக்கி விழுந்து விட்டார். அவ்வளவுதான்!

### காலதரா? காதலரா?

Window என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். வளமான நம் தமிழ் மொழியில் இதனைச் சொல்வதற்கு மூன்று அருமையான சொற்கள் இருக்கின்றன. அவை பலகணி, சாளரம், காலதர் ஆகியனவாகும். ஆனால், நாம் இந்த நல்ல சொற்களையெல்லாம் புறக்கணித்து விட்டு, ''ஜன்னல்'' என்னும் ஒரு சொல்லைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். இது போர்ச்சுகீசிய மொழியின் சொல்லாகும். Ventilator என்னும் வேறொரு சொல் இருக்கின்றதல்லவா? பலகணியைக் குறிக்கும் பொதுவானதொரு சொல்லாக இது இருந்த போதிலும், தற்போது குளிப்பறை, கழிப்பறை ஆகியவற்றில் அமைந்துள்ள பலகணியைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காற்று எளிதாக உள்ளே புகுந்து புழங்குவதற்காகச் செய்யப்படும் வசதியாகும் இது. ஜன்னலுக்கு மூன்று தமிழ்ச் சொற்கள் இருப்பதால் Ventilator என்பதற்கு நாம் ''காலதர்'' என்று அமைத்துக்கொண்டுள்ளோம். கால்-காற்று. அதர்-வழி. காற்று வந்து புழங்குவதற்கான வழி. வகுப்புத் தேர்வில் ஒரு நண்பர், Ventilator என்னும் சொல்லுக்கு உரிய மொழிபெயர்ப்பாக ''காதலர்'' என்று எழுதிவைத்திருந்தார்! ''காலதர்'' என்னும் சொல்லிலுள்ள இரண்டு எழுத்துக்கள் இடம்மாறி ''காதலர்'' என்று ஆகிவிட்டது! அலுவலகத்தில் புதிதாக வேலையில் சேர்ந்தவர்களுக்குத்தான் ஆட்சிமொழிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. அவர்கள் அனைவருமே இளைஞர்கள். அவர்களின் மனம் எங்கெல்லாம் சென்று உலாவி வரும் என்று சொல்லத் தேவையில்லை! காற்றின் புழக்கத்தை விட்டுவிட்டு மனத்தின் புழக்கத்தைப் படம் பிடித்துவிட்டார் நண்பர்!

### ஓட்டக் கோப்பு

''கோப்பு'' என்னும் சொல் இப்பொழுது நன்றாகப் பழகி விட்டது. அலுவலகங்களில் பணியாற்றாதவர்கள் கூட இப்போது File என்று சொல்வதில்லை. கோப்பு என்றே சொல்கின்றார்கள். ''Main file'' என்று சொல்லும்போது, தலைக் கோப்பு என்று சொல்ல வேண்டும். (Main Gate என்பதற்குத் தலை வாயில் என்று சொல்கின்றோமல்லவா, அதனை இங்கு நினைவு கூர்தல் வேண்டும்). இதைப் போலவே Linked file, Routine file என்னும் கோப்புகள் இருக்கின்றன. இவற்றை முறையே இணைப்புக் கோப்பு என்றும், வாலாயக் கோப்பு என்றும் கூறுகின்றோம். இன்னொரு கோப்பு இருக்கிறது. அதன் பெயர் Running file என்பதாகும்! இதன்மொழி பெயர்ப்பு எப்பாடு பட்டிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை,

நண்பர் ஒருவர்''ஓட்டக்கோப்பு'' என்று தெளிவாக எழுதிவைத்தார்! ''ஓட்டப் பந்தயம்'' அவர் நினைவில் ஓடி வந்திருக்கும்! அகராதியைப் புரட்டிப் பார்த்தால் அதில் ''நடப்புக் கோப்பு'' என்று காணப்பட்டது. இந்தப் பெயர் பொருந்தாது; ஏனென்றால், Current file என்பதை ''நடப்புக் கோப்பு'' என்று ஏற்கனவே அழைத்து வருகின்றோம். நேருக்கு நேரான, சொல்லுக்குச் சொல்லான மொழி பெயர்ப்பே சரியானதென்றால், அதனை ஓட்டக்கோப்பு என்பது பொருத்தந்தானே! ஆங்கிலத்தில் ஓடும் கோப்பாக இருக்கும்போது தமிழில் மட்டும் நடக்கும் கோப்பாக (நடப்புக் கோப்பாக) ஏன் அது மாறவேண்டும்! தமிழன் பின்தங்கிவிட்டான் என்பதைத் தரணிக்குக் காட்டுவதற்காகவா? குறித்த ஒரு பொருளைப் பற்றிக் கடிதங்கள் அவ்வப்போது தகவலுக்காக வருகின்றன. அவற்றைப் படித்த பிறகு வரிசையாக, ஒன்றன்பின் ஒன்றாக, ஒரே கோப்பாகக் கோத்து வைக்கின்றோம். இதற்கு உரிய நல்ல பெயர் ''தொடர் கோப்பு'' என்பதாகும்.

### கொடியா? குறியீடா?

ஒவ்வொரு கோப்பிலும் ஒவ்வொரு பொருள் ஆராயப்படுகின்றது. முடிவு எடுக்கும் முன்னர்

தொடர்புடைய எல்லாச் செய்தி களையும் எண்ணிப் பார்ப்பது, முதன்மையாகிறது. ஆதாரமான செய்திகள், வழிகாட்டும் குறிப்பு கள் ஆகியவை பழைய கோப்பு களில், பல நேரங்களில், கிடைக் கும். ஆகையால், பழைய கோப்பு களும், அதே கோப்பில் அடியிலே வைக்கப்பட்டிருக்கும். அந்தப் பழைய கோப்புகளெல்லாம் அழகாக அடுக்கப்பட்டு, அட்டை போடப்பட்டு, தைக்கப்பட்டிருக் கும். எந்தப் பழைய கோப்பில் எந்தச் செய்தி, எந்த இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்ப தைக் குறிப்பதற்கு உதவியாக, கீழே வைக்கப்பட்டுள்ள ஒவ் வொரு பழைய கோப்பிலும் ஓர் அடையாளம் அமைக்கப்பட்டி ருக்கும்.

தடித்த காகிதத் துண் டில், குண்டு எழுத்துக்கள் அச் சிடப்பட்டுள்ள இந்த அடையா ளத்திற்கு, ஆங்கிலத்தில் Flag என்று பெயர். ஆங்கிலத்தில் அமைக்கப்பட்டுள்ள எந்தப் பெய ரும், அதன் பொருளை உற்று நோக்குங்கால், பொருத்தமில் லாததுபோல் தோன்றினாலுங் கூட நீண்ட நெடிய பழக்கம் காரணமாக, அது இனிப்பாகவே தெரியும். அந்த வகையிலே அமைந்துள்ள ஒரு பெயர்தான் Flag என்னும் சொல். ஆனால், நாம் தமிழிலே சொல்லும்போது அதைக் ''கொடி'' என்று சொல் வதில்லை! கருத்தைக் கவனத்தில் கொண்டு ''குறியீடு'' என்று சொல்கிறோம். Flagging என்று வரும்போது ''குறியீடு அமைத் தல்'' என்று சொல்கிறோம். வகுப்புத் தேர்வில் ஒரு நண்பர், Flagging என்பதற்குக் ''கொடியேற்றுதல்''என்று எழுதி யிருந்தார்! அவர் அன்று காலை யில் ''கொடியேற்று விழா''ஒன் றிற்குச் சென்று திரும்பியிருப்பார் போலும்!

Director of Animal Husbandry என்னும் பதவிப் பெயரை எடுத் துக்கொள்வோம். இதற்கான சரியான மொழி பெயர்ப்பு என்ன என்பது பலருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஏனென்றால், அதற்குரிய தமிழ்ப்பெயரும் நன்கு பழகி வந்துவிட்டது. ஆனால், ஒரு சிலர் இன்னுங்கூட சரியான தமிழ்ப்பெயரைத் தெரிந்துகொள் ளாமல் இருப்பார்கள். ''நமக்குத் தான் தமிழ் நன்றாகத் தெரியுமே! தேவைப்படும் நேரத்தில் பார்த் துக்கொண்டால் போகிறது'' என் பது அவர்களின் மனப் போக்கு!



ஒரு நாள் திடீரென்று Director of Animal Husbandry என்னும் பதவிப் பெயரைத் தமிழில் நாம் எவ்வாறு சொல்கின்றோம் என்று கேட்டுவிட்டால் திருதிருவென்று திருடனைப்போல் விழிப்பார் கள்! தப்பியோடத் தடம் பார்ப் பார்கள்! Animal என்றால் மிருகம் என்று எழுதிக் கொள் வார்கள்! விலங்கு என்றுகூட எழுதிக் கொள்ளமாட்டார்கள்! கால்நடை என்னும் கருத்து மனத்திலே தோன்றவே தோன் றாது. Husbandry என்றால் ஒன்றுமே விளங்கவில்லையே! ''தெரியவில்லை'' என்று எப் படிச் சொல்வது? இத்தகைய சூழ்நிலையில் இருந்தார் ஒரு நண்பர். ''பராமரிப்பு'' என்னும் சொல் பக்கத்திலேயிருந்து காதில் விழுந்தது! சரி, ''மிருக பரா மரிப்பு இயக்குநர்'' என்று எழுதி முடித்தார். இன்னொரு நண்ப ருக்கு, எவ்வளவோ சிந்தித்துப் பார்த்துங்கூட, Husbandry என்னும் சொல்லைப் பற்றித் தெரியவில்லை. பக்கத்திலிருப்ப வர்கள் யாரும் உதவி செய்வ தாகவும் இல்லை! சரி, அரைவாசி மதிப்பு எண்ணாவது கிடைக்கட் டும், தெரிந்தவரையில் எழுதி வைப்போம் என்று துணிந்து, ''மிருக இயக்குநர்''என்று எழுதி வைத்தார்! மொழிபெயர்ப்பு படுத்தும்பாட்டை என்னவென்று சொல்வது?

**ஆள் பிடிப்பவர்....**

Canvass என்னும் சொல் நமக்கு நன்றாகத் தெரிந்தசொல். தேர்தல் சமயங்களில் மிகவும் அடிபடும் சொல். Canvass செய்பவரை Canvasser என்று சொல்கிறோம். வகுப்புத் தேர் வில் Canvasser என்பவர் யார் என்று கேட்டு வைத்தேன். முன்பே படித்துவைத்திருந்தவர் கள் சரியான விடையைத் தந்து விட்டனர். ஆனால், சொந்த மொழிபெயர்ப்புச் செய்பவர்கள் தாம் நகைச்சுவை விருந்துகளை நமக்கு நல்குவார்கள்! ''ஆதரவு நாடுபவர்'' என்பது ஆட்சிமொழி அகராதி தருகின்ற மொழி பெயர்ப்பு. இதை அரைகுறை யாகப் படித்து வைத்திருந்த ஒரு நண்பர் ''ஆள் நாடுபவர்'' என்று எழுதி வைத்தார். சொந்த மொழி பெயர்ப்பில் முழுமையாக ஈடு பட்ட இன்னொரு நண்பர், "பேரம் பிடிப்பவர்'' என்று எழுதி யிருந்தார்! இன்னுமொரு நண் பர் எழுதியிருந்ததைக் கடைசி யாகச் சொல்லி விடுகின்றேன். அது மணிமகுடம் வைத்தாற் போன்று விளங்குவதாகும்! அது தான் ''ஆள் பிடிப்பவர்''!

**முன்னேறும் நாடுகள்**

Developed countries, Developing countries என்னும் தொடர் களை நாம் அடிக்கடி கேட்கின் றோம். அமெரிக்கா போன்ற நாடுகளை Developed countries என்று சொல்கி றோம். இந்தியா போன்ற நாடு களை Developing countries என்று அழைக்கின்றோம். நாடா வளந்தரும் நாடுகள், நாட வளந்தரும் நாடுகள் என்று நம் முன்னோர்கள் அமைத்த முழுமணிப் பெயர்கள் இப் போது நினைவிற்கு வருகின்றன. ஆனால், இந்தப் பெயர்கள் மிகுந்த சிறப்பிற்கு உரியன. அவற்றை இங்கு பயன்படுத்தத் தேவையில்லை. வளர்ச்சிபெற்ற நாடுகள், வளர்ச்சி பெறும் நாடு கள் என்று சொல்லலாம். எனி னும் முன்னேறிய நாடுகள், முன் னேறும் நாடுகள் என்னும் பெயர் களே இப்போது நடைமுறையில் உள்ளன. பின்தங்கிய நிலையில் இருக்கும் நாடுகளையே ''முன் னேறும் நாடுகள்'' என்று அழகு றக் குறிக்கின்றோம். வகுப்புத் தேர்வில் ஒரு நண்பர், ''பிற் போக்கு நாடுகள்'' என்று எழுதி வைத்தார்! நம்முடைய மொழி பெயர்ப்புகள் பின்தங்கியிருந் தால்கூட தவறில்லை! அவை பிற்போக்காக உள்ளனவே!

மேற் கூறியவற்றால் நம்மு டைய இன்றைய நிலையை நாம் ஐயமற அறிந்து கொள்ளலாம். எந்த அளவிற்கு ஆர்வமும் ஆக் கப்பணியும் மேலும் தேவைப்படு கின்றன என்பதையும் தெளி வாகத் தெரிந்துகொள்ளலாம். சிறந்த தமிழ்ச் சொற்களை நாம் திரட்டி வைத்துள்ளோம்; இனி யும் திரட்ட முடியும்; எடுத்து வழங்கவும் கற்றுக்கொண்டு ஏற் றம் பெறுதல் வேண்டும்!

# புதிய பயிர் இரகங்கள்

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக கண்டுபிடிப்புகள்

## (1979-80)

### மதுரை—1 நெல் (கல்ச்சர் 2)

உருவாக்கம் : ஐ. ஆர். 8 சித்திரைக்கார்

வயது : 115—120 நாட்கள்

பருவம் : ஆடி, ஆவணி, புரட்டாசி.

மகசூல் : 1800 கிலோ/எக்டர்.

சிறப்பியல்புகள் : முகவை, நெல்லை, குமரி, செங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்றது. வறட்சியைத் தாங்கவல்லது. சாயாத தன்மை உடையது. பனியின் பாதிப்பைத் தாங்கவல்லது. நெல் மணி கதிரிலிருந்து உதிராது. சித்திரைக்கார் சோற்றைப் போல் இதுவும் இருக்கும்.

உழவியல் நேர்த்தி : நேரடி விதைப்புக்கு ஏற்றது. விதையளவு 60 கிலோ/எக்டர். அடியுரமாக எக்டருக்குத் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து முறையே 20-20-20 கிலோ இட வேண்டும். மழையின் தன்மைக்கேற்ப பஞ்சுப் பூட்டை வாங்கும் சமயத்தில் 20 கிலோ தழைச் சத்து இட வேண்டும்.

### எக்ஸ். 4 வீரிய ஒட்டுக்கம்பு

உருவாக்கம் : எம். எஸ். 5141ஏ பி.டி. 1921 (ஆப்பிரிக்க இரகம்) ஆகிய இரண்டு இரகங்களை ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது.

வயது :80—85 நாட்கள்

பருவம் : ஆனி, ஆடி; தை, மாசி.

மகசூல் : 2.5 டன்/ஏக்டர்

சிறப்பியல்புகள் : பசுங்கதிர் நோய் தாக்குதலைத் தாங்கும் தன்மை கொண்டது. சாகுபடியிலுள்ள இதர வீரிய இரகங்களைவிட அதிக மகசூல் தரவல்லது. எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது.

உழவியல் பரிந்துரைகள் : இறைவையில் 40-40-40 கி/எக்., மானாவாரில் 40-20-20 கி/எக். என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இடவேண்டும்.

### கோ. 24 சோளம் (யு.எஸ்.வி. 5)

உருவாக்கம் : சி. கே. 60 எ × எஸ். பி. ஆர். 1341 ஆகிய இரகங்களின் கூட்டுச் சேர்க்கையால் உருவானது.


வயது : 105 நாட்கள்

பருவம் : மானாவாரியில் ஆனி—ஆடி, புரட்டாசிப் பட்டங்கள். இறைவையில் தை-மாசிப் பட்டம்.

மகசூல் : இறைவையில் தானியம் 5 டன்/எக். தட்டு 16 டன்/எக். மானாவாரியில் தானியம் 2.8 டன்/எக்., தட்டு 12 டன்/எக்.

சிறப்பியல்புகள் : வறட்சியைத் தாங்கவல்லது குருத்துப்புழு, தண்டுப்புழு, மிட்ஜ ஈ.





ஆகியவற்றின் தாக்குதலை ஓரளவு சமாளிக்கக் கூடியது. விவசாயிகள் இதனைப் பயிர் செய்து விதையினைச் சேகரித்து மறு பட்டத்திற்கு உபயோகிக் கலாம்.

உழவியல் முறை: விதை அளவு: 10 கிலோ/எக். உர அளவு: இறைவை : 90-45-45 கிலோ/எக்., மானாவாரி: 40-20-0கிலோ எக். என்ற அளவில் தழை, மணி, சாம் பல் சத்துக்கள் இடவேண்டும்.






## கோ. 3 வரகு (பி.எஸ். 175)

உருவாக்கம்: பி. எஸ். 175 என்ற இரகத்தை ஜியார்ஜியன் வகையில் இருந்து உரு வாக்கப்பட்டது.

வயது : 120 நாட்கள்

பருவம் : ஆனி-ஆடி பட்டத்தில் மட்டும் பயிர் செய்யவேண்டும்.

மகசூல் : 2.5 டன்/எக்டர்.

சிறப்பியல்புகள் : புன்செய்வாழ் வேளாண்குடி மக்களுக்கு ஏற்றது.

உழவியல்முறை : விதை அளவு: 10 கிலோ/எக். உரம்: 40-20-0 கி/எக். என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத் துக்கள் இட வேண்டும்.

## கோ. 1 சோயா மொச்சை (யு.ஜி.எம். 20 ஏ.எஸ்)

உருவாக்கம் : யு. ஜி. எம். 20 என்ற தாய் லாந்து இரகத்திலிருந்து தேர்வு செய்யப் பட்டது.

வயது : 85 நாட்கள்

பருவம் : எல்லாப் பருவத்திற்கும் உகந்தது.

மகசூல் : இறைவை : 2.2 டன்/எக். மானா வாரி : 1.0 டன்/எக்.

சிறப்பியல்புகள் : 40-45 சதம் புரதச்சத்தும், 20-24 சதம் எண்ணெய்ச் சத்தும் உள் ளது. காய் துளைக்கும் புழு, தண்டு துளைக்கும் புழு ஆகியவை தாக்காத தன்மை கொண்டது.

உழவியல்முறை: விதை அளவு: 35 கிலோ/எக் உர அளவு: 10-80-40 கி/எக். என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத் துக்கள் இடவேண்டும்.

## கோ. 1 மொச்சை (டி.எல்.2539)

உருவாக்கம் : டி. எல். 2539, கோவை நாட்டு இரகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.

வயது: 140 நாட்கள்

பருவம் : ஆடி-ஆவணி

மகசூல்: 1.5 டன்/எக்டர்

சிறப்பியல்புகள் : உள்நாட்டு இரகத்தைவிட வயதில் 40 நாட்கள் குறைவு. மொச்சை பெரிதாகவும், கறுப்பு நிறமாகவும் உள் ளது. வறட்சியைத் தாங்கவல்லது.

உழவியல் முறை: விதை அளவு, 20 கிலோ/எக். உர அளவு: 12.5-25-0 என்ற அள வில் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இடவேண்டும்.

## கோ. 2 சர்க்கரைவள்ளிக்கிழங்கு (ஐ. பி. 81)

உருவாக்கம் : ஐ.பி. 81 என்ற வளர்ப்பு எண்.

வயது : 110-115 நாட்கள்

பருவம் : ஆனி—ஆடி—புரட்டாசி

மகசூல் : 32 டன்/எக்டர்

சிறப்பியல்பு : நடுத்தரப் பருமனுடையது. தோல் இளம் சிவப்பு-சதை வெண்மை நிறம். கூன் வண்டு தாக்குதல் குறைவு.

## கோ. 1 முல்லை

உருவாக்கம் : எல். ஆர். இரகத்தையே தேர்வு செய்யப்பட்டது.

வயது : சுமார் 25 ஆண்டுகள்

பருவம் : ஜூன்-ஜூலை.

மகசூல் : 9 டன்/எக்டர்.

சிறப்பியல்புகள் : காம்பு நீளம், மொட்டு பருமனாக உள்ளது. இம்முல்லை அதிக பிழிவுச்சாறு கொடுக்கவல்லது.









## கோ. 1 குதிரைமசால்

உருவாக்கம் : நாட்டு இரகத்திலிருந்து இனத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வயது : ஒரு வருடம்

பருவம் : எல்லாப் பருவங்களுக்கும் ஏற்றது. ஐப்பசி-கார்த்திகை மாதங்களில் விதைப்பது நன்று.

பசுந்தீவன மகசூல் : ஓர் அறுவடைக்கு 6.8 டன்/எக். ஆண்டுக்கு 10 அறுவடை மூலமாக 60-80 டன்/எக்.

சிறப்பியல்புகள் : அதிக வீரியம், அதிக தூர்கள், அதிக உயரம், அதிகப் பசுந்தீவன மகசூல்.

## கோ. 1 பிச்சிப்பூ (ஜாதிமல்லி)

உருவாக்கம் : லக்னோ ஜாதிமல்லியிலிருந்து தேர்வு செய்யப்பட்டது.

வயது : சுமார் 25 ஆண்டுகள்

பருவம் : ஜூன்-ஜூலை.

மகசூல் : 10 டன்/எக்டர்.

சிறப்பியல்புகள் : இளஞ்சிவப்பு மொட்டுகள். வெள்ளை ஜாதி மல்லியைவிட அதிகப் பிழிவுச்சாறு கிடைக்கும்.

அறிவியல் அரங்கம்



# தூண்டுதல் முறையில் மீன்களைக் கருவுறச் செய்யும் முறை

—டாக்டர்
**இ. விவேகானந்தன்**

**மீ**ன் புரதச்சத்து நிறைந்த உணவு. இயற்கையில் பிடிக்கப்படும் மீன்களைத் தவிர, மீன்கள் இப்போது பண்ணைகளில் வளர்க்கப்பட்டு, உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது இந்த முறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, அதிகமாகப் புரதச் சத்து கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

பண்ணைகளில் மீன் வளர்ப்பு வெற்றிகரமாக அமைவதற்குப் போதுமான அளவு மீன்குஞ்சுகள் கிடைப்பது அவசியம். ஆனால், நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை வேண்டிய அளவு சேகரிப்பது மிகவும் கடினம். அனேக மீன்கள் வளர்ப்புப் பண்ணைகளில் தாமாகவே கருத்தரித்து முட்டையிடுவதில்லை. ஆகையால், வளர்ப்புப் பண்ணைகளில் மீன்களைத் தூண்டுதல் முறையில் கருத்தரிக்கப்பட்டு முட்டையிட வைக்கும் முறை இந்தியாவில் 1957-ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படுகிறது. இம்முறையில் வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படாத, நல்ல கருத்தரித்த நிலையில் உள்ள மீன்களின் Pituitary சுரப்பி பயன்படுத்தப்படுகிறது. இச் சுரப்பி சுரக்கும் Pituitary உட்சுரப்பு ஆண் மீன் மற்றும் பெண் மீனின் உடலில் ஊசிமூலம் செலுத்தப்பட்டால் அவை இணை சேரத் தூண்டுகிறது. இப்போது அதன் செயல்முறையைப் பார்ப்போம்.


பனிக்கட்டியில் வைத்து நன்றாகப் பாதுகாக்கப்பட்ட கருத்தரித்த மீனின் சுரப்பியே பயன்படுத்தப்படுகிறது. அந்த மீனின் தலையைக் குடைந்து மூளைக்கு அடியில் இருக்கும் Pituitary சுரப்பி கவனமாக வெளியே எடுக்கப்பட்டு, Alcohol இல்வைத்து பாதுகாக்கப்படுகிறது. தேவைப்படும் போது இச்சுரப்பியிலிருந்து Pituitary உட்சுரப்பு எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறாக Pituitary உட்சுரப்பு சேகரிக்கப்படும் போது, வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட இருக்கும் மீன் இனத்தின் ஆண், பெண் மீன்கள் வளர்ப்புப் பண்ணையில் நன்றாக வளர்ச்சியடைந்த தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம். இந்த மீன்களின் வளர்ச்சி நிலையையும், சுற்றுப்புறச் சூழ்நிலையையும் பொறுத்து, பக்குவப்படுத்தப்பட்ட Pituitary உட்சுரப்பு ஊசிமூலம் மீன்களின் உடலுக்குள் செலுத்தப்படுகிறது.

பொதுவாக 4 கிலோகிராம் எடையுள்ள பெண் மீனிற்கு, சுமார் 10 கி.மி. எடையுள்ள உட்சுரப்பு செலுத்தப்படுகிறது. ஆறு மணி நேரத்திற்குப் பிறகு, மறுபடியும் 25 கி.மீ சுரப்பு செலுத்தப்படுகிறது. ஆண் மீனிற்கு ஒரு தடவை மட்டுமே சுரப்பு செலுத்தப்படுகிறது. பெண் மீனிற்கு இரண்டாவதுதடவை செலுத்தப்படும்போது 4 கிலோ எடையுள்ள ஆண் மீனிற்கு 10 மி.கி. உட்சுரப்பு வீதம் கொடுக்கப்படுகிறது.

உட்சுரப்பு செலுத்தப்பட்டவுடன் பெண் மீனும், ஆண்மீனும் இணை சேர்வதற்கான அடைப்பில் தனித்து விடப்படுகின்றன. இணை சேர்வதற்கான அடைப்பு, கொசு வலையில் செய்யப்பட்டு, மூங்கில் கம்புகளில் நீர்நிலையின் கரையில் கட்டப்படுகிறது. இந்த அமைப்பு, மீன்கள் தப்பி ஓடாமலும், மற்ற மீன்களால் இந்த அமைப்பு மீன்களுக்குத் தொந்தரவு ஏற்படாமல் பாதுகாக்கவும் உதவுகிறது. இந்த அடைப்பில் விடப்பட்ட 6 மணி நேரத்திற்குள் ஆண் மீனும் பெண் மீனும் இணை சேர்கின்றன. ஊசி மூலம் செலுத்தப்பட்ட Pituitary உட்சுரப்பு இவைகளைத் தூண்டி இணை சேர உதவுகிறது. சிறிது நேரத்தில் பெண் மீன் இலட்சக்கணக்கான முட்டைகளை இடுகிறது. இந்த முட்டைகள் வாளிகளில் சேகரிக்கப்பட்டு, பொரிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அடைப்புகளில் பத்திரமாக வைக்கப்படுகின்றன. இந்த அடைப்பும் வலையால் செய்யப்பட்டு, நீர்நிலையின் கரையில் உள்ளது. சுமார் ஒரு இலட்சம் முட்டைகள் ஒரு அடைப்பில் வைக்கப்படுகின்றன.

சுமார் 18 மணி நேரம் கழித்து முட்டைகள் பொரிக்கின்றன. அதிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் 3 நாட்களுக்கு அந்த அடைப்பிலேயே இருக்கின்றன. தானாக உணவு தேட ஆரம்பித்த பின் அவை வளர்ப்புப் பண்ணைக்கு மாற்றப்படுகின்றன. இந்த முறையினால், நமக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய அளவு மீன் வளர்ப்பிற்குத் தேவையான மீன்குஞ்சுகள் கிடைக்கின்றன. இந்தமுறையைப் பின்பற்றி Carps போன்ற கெண்டை மீன்கள் ஏராளமான முட்டையிடுகின்றன. இயற்கையில் இந்த மீன்கள் ஆண்டிற்கு ஒரு தடவை மட்டுமே முட்டையிடுகின்றன. ஆனால், தூண்டுதல் முறையில், ஒரே இணை மீன்கள் ஓராண்டில் இரண்டு தடவை முட்டையிட வைக்கப்படுகின்றன. முதல் தடவை முட்டையிட்டபின், 60 நாட்கள் கழித்து மறுபடியும் முட்டையிட வைக்கப்படலாம். மேலும் Pituitary உட்சுரப்பு பெருமளவில் சேகரிக்கப்பட்டு, Pituitary வங்கி ஒன்று நிறுவுவதற்கான சாத்தியமும் இருக்கிறது. அப்படிப்பட்ட வங்கி ஏற்படுத்தப்படுமேயானால் அது மீன் வளர்ப்புத்துறையில் ஒரு பெரிய முன்னேற்றம் என்பதில் ஐயமில்லை!

**(நன்றி: சென்னை வானொலி)**



# பறக்கும் பாம்பு

இரா. அண்ணாதுரை,
மாவட்ட ஆட்சித் தலைவரின்
தனி உதவியாளர்,
இராமநாதபுரம் மாவட்டம்

"இறக்கைகள் கிடையாது. ஆனால் பறக்கும்! அது என்ன?'' என்று விடுகதை விடுபோரிடம் ''அது தான் பறக்கும் பாம்பு'' என்று தயங்காமல் விடை கூறி விடலாம். மரத்தை விட்டு மரத்திற்கும், மரத்திலிருந்து தரைக்கும் சுமார் 30 அடி தொலைவிற்குப் பறந்து செல்லும் ''பறக்கும் பாம்பு'' ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் -குற்றாலத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பறக்கும் பாம்பு இந்தியா, இலங்கை, மலேயா, கிழக்கிந்திய தீவுகள் ஆகிய நாடுகளில், சில பகுதிகளில் மட்டுமே மிகவும் அபூர்வமாகக் காணப்படுகிறது. மலைப் பகுதிகளிலும், மலையைச் சார்ந்த அடர்ந்த காடுகளிலும் பறக்கும் பாம்புகள் காணப் படும். 'சுவர்க்க மரப் பாம்பு' *(The Paradise tree Snake)* என்று பொதுவாக ஆங்கிலத்தில் கூறப் படும் பறக்கும் பாம்பு விலங்கியலின்படி 'கிரைசோபெலயா ஆர்னட்டா *(Chroysopelea Ornata)* என்று கூறப்படுகிறது. இப்பறக்கும் பாம்பு உயரத்திலிருக்கும் மரக் கிளைகளுக்கு ஊர்ந்து சென்று பின்னர் அங்கிருந்து பறந்து சாய்வாகத் தரையில் இறங்கிவிடும். அல்லது தாழ்ந்த பகுதியில் உள்ள வேறு மரத்துக்கும் போகும். மரக்கிளையைவிட்டுப் பறக்க ஆரம்பிக்கும் முன் உடலின் அடிப்பாகம் உள் வளைந்து காற்றை அடைத்துக் கொண்டு பின்னர் ஒரு குச்சி போல் நீண்டு பாய்கிறது.(பறக்கிறது).

குற்றாலத்திலுள்ள பாம்புப் பண்ணைப் பராமரிப்பாளர் திரு எஸ்.பழனி என்பவரால் பிடிக்கப் பட்டு, தற்போது பொதுமக்கள் பார்வைக்காக குற்றாலம் நகரியப் பாம்புப் பண்ணையில் இப் பறக்கும் பாம்பு விடப்பட்டிருக்கிறது. மூன்று அடிக்குச் சற்று கூடுதலான நீளமுடைய இப்பறக்கும் பாம்பு கட்டைவிரல் பருமளவில் இருக்கிறது. உடலின் மேற்பகுதியில் (முதுகில்) கருப்பு, சிவப்பு, நிறங்களிடையே வெள்ளையும் சில இடங்களில் மஞ்சள் நிறமும் காணப்படுகிறது. உடலின் அடிப்பாகத்தில் வெளிர் பச்சை நிறமாக உள்ளது. பிறந்து 5 ஆண்டாயிருக்கலாம் என்று கருதப்படுகின்ற இப்பறக்கும் பாம்பின் முக அமைப்பு கொம்பேறி மூர்க்கனைப் போல் இருக்கிறது. இப்பறக்கும் பாம்பின் தலையில் சிறிய இரத்தினக் கற்கள் பதித்தது போல் ஆழகாய் வண்ணப் பொட்டுகள் இருக்கின்றன. உருவத்தில் ஏறக்குறைய அதனை ஒத்திருந்தாலும் இப் பாம்பிற்கு உடலில் அமைந்த கண்ணைக்கவரும் நிறங்கள் வேறு எந்தப் பாம்பிற்கும் இல்லை எனலாம். நீரிலும், நிலத்திலும் ஓடக் கூடிய இந்தப் பாம்பு கொம்பேறி மூர்க்கன்பாம்பைவிட வேகமாகத் தரையில் ஓடக்கூடியது.

மிகச் சிறிய பறவைகள், பறவை மற்றும் பல்லிகளின் முட்டைகள், எலி, அணில் இவற்றின் குட்டிகள், பல்லி, ஓணான், அரணை ஆகியவற்றைப் பறக்கும் பாம்பு இரையாகக் கொண்டாலும் பல்லிகளையே இது பெரிதும் விரும்பி உண்ணும். இதற்குக் கீழ்த்தாடையில் பக்கத்துக்கு 22 பற்கள் உண்டு. கடைவாய்ப் பற்களில் பக்கத்துக்கு நான்கு நச்சுப் பற்கள் உள்ளன. பறக்கும் பாம்பின் நஞ்சினது தன்மை சிறு பிராணிகளை மட்டுமே கொல்லக் கூடியது. மனிதர்களுக்கு இதனால் கேடில்லை. மனிதர்களைக் கடித்தாலும்தேள் கொட்டியது போன்று வலி மட்டும் ஏற்படும்.

மிக எளிதில் பிடிக்க முடியாதவாறு விரைந்து, பறந்து, பாய்ந்து போகும் சிறப்புப் பெற்ற அபூர்வ வகைப் பாம்பு, இப்பறக்கும் பாம்பு வகைகளுள் ஒரு தனி (சிறப்பு) ரகமே!

# தீ விபத்துகளைத் தவிர்ப்போம்

வீடுகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், பொதுக்கூடங்கள் எதுவானாலும், தீ விபத்து ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் பலவாறாயுள்ளன. இவைகளைப் பற்றித்தெரிந்துகொண்டு,விபத்து நிகழக்கூடிய காரணங்களை அகற்றுவதன் மூலமே தீ விபத்தைத் தடுக்கவும், தீயுடன் போராட வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கவும் முடியும். ஆகையால், ஒவ்வொருவரும், அவரவருள்ள நிலைகேற்ப, தான் ஒரு தீ விபத்து ஏற்படுவதற்கு என்றும் காரணமாகக் கூடாது என்ற விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால், தீ விபத்தினால் ஏற்படும் சேதங்களைப் பெருமளவு தவிர்க்க முடியும்.

**தொழிற்சாலைகளில்**

தொழிற்சாலைகளில் தீ விபத்து ஏற்பட்டால் அதனால் வேலைகள் தடைபட்டுவிடும். கருவிகளையும், மூலப்பொருட்களையும்நிறுவனத்தின்சொத்துக்களையும் மதிப்பையும் தொழிலாளர்களின் வாழ்வையும் நாசப்படுத்தி விடக்கூடும்.

உங்களை அழிப்பதற்கு முன் நெருப்பைத் தடுத்து அணையுங்கள். தொழிற்சாலைகளில் முன்முனைத் தீத்தடுப்பு பற்றிச் சில அடிப்படையான வழிமுறைகளைத் அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

**ஒவ்வொரு தொழிலாளியும் தீ விபத்துக்குக் காரணமா?**

கவனக்குறைவுடன் அசட்டையாக இருக்கும் தொழிலாளியே தீ விபத்துக்குக் காரணமாகக் கூடிய முதல் ஆளாவார். ஆனால் நல்லமுறையில் பயிற்சி பெற்ற விவரம் புரிந்த, தீப்பாதுகாப்பு எண்ணங்கொண்ட தொழிலாளியால், உண்டான தீ விபத்துக்களை வெகு சுலபத்தில் துடைக்க உதவ முடியும். தீவிபத்தைத்தடுக்கவும், பாதுகாப்பு முறைகளைக் கடைப் பிடிக்கவும் எல்லாத் தொழிலாளருக்கும் பயிற்சி அளிக்க வேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் — அவர் ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதியில், தீ விபத்து ஏற்படக் காரணமாக உள்ள இடங்களைக் கண்டுபிடித்து அவற்றைச் சீர்படுத்துவது மிகமுக்கியமாகும்.

**ஒவ்வொரு தொழிலாளியும் கண்டிப்பாக அறிய வேண்டியது என்ன?**

தீப் பிடிப்பதற்கான நிலைமைகளை ஒவ்வொரு ஊழியரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

பணியாற்றும் இடங்களை மோசமான நிலைமையில் வைத்திருப்பது. மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது, ஏனோ தானோ என்ற மனப்போக்கு- இவை தவிர்க்கப்படல் வேண்டும்.

தீப்பிடித்தால் அவர் தெரிந்து வைக்கவேண்டியவை:

*தீ அணைக்கும் படையை உடனே எப்படி அழைப்பது!*

*தீ அணைப்புக் கருவியை எப்படி பயன்படுத்துவது?*

எப்படி விபத்து ஏற்படாமல் தவிர்ப்பது - மற்றவர்களை எவ்வாறு தப்பித்துக் கொள்ளச்செய்வது?

**விழிப்புணர்ச்சியுடன் தைரியமாக இருக்கவேண்டும்!**

தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் நல்லமுறையில் பயிற்சி பெற்றவர்களாகத் திகழ, தீயணைப்புப் பயிற்சி வகுப்புகளைக் குறிப்பிட்ட நாட்களில் நடத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஷிப்டிலும் இப்படி முழு அளவில் பயிற்சி பெற்ற ஒரு ஊழியர் இருப்பது அவசியம்.

தொழிற்சாலைகளில் தீ விபத்துக்கு முக்கியக்காரணமாக இருப்பது மின்சாரத்தை தவறாகப் பயன்படுத்துவது - தவறான மின்சார ஒயரிங் அமைப்புக்கள்தான்!

**ஃபிட்டிங், ஒயரிங் சரியாக இருக்கிறதா?**

எப்போதும் சரியான மாதிரியுடன் சரியான அமைப்புள்ள மின்சார ஃபிட்டிங்குகள், நல்ல தரமுள்ள ஃப்யூஸ்கள், மினியேச்சர், சர்க்யூட் ப்ரேக்கர்கள் ஆகியவற்றையே பயன்படுத்துங்கள், மின்சார அமைப்பு நிறுவவும், பராமரிக்கவும் சர்டிபிகேட் பெற்ற காண்ட்ராக்டரை மட்டுமே அனுமதியுங்கள். அவ்வப்போது சோதனை செய்து கொள்வது சாலச் சிறந்தது!

**வெளிச்சத்திலிருந்து தீ!**

சாதாரண பல்பு வெளிச்சத்தின் வெப்பத்திலிருந்தும் தீப்

பிடிக்கக்கூடும். எனவே அதிகம் முழுசூடுஏறாமல்இருக்கப்போதிய காற்று வசதிக்கு ஏற்பாடுசெய்து கொள்ளுங்கள். குழல் விளக்குகளில் தவறான ஒரு 'சோக்' அல்லது ''கண்டன்சர்' இருந்தாலும் சூடு ஏறிவிடும். கவனமாகக் கவனித்து வரவும்.

**சூடேற்றும் கருவிகள் கவனம்**

சூடேற்றக்கூடிய கருவிகள் பெட்டிகளில் அடைக்கப்பட்டு, தூசி துரும்புகளால் மூடப்பட்டிருந்தால் தீப்பிடிக்கக்கூடும். கவனமாகக்கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

**ஓவர்லோடிங்-அதிகச் சூடுநெருப்பு சுவாசம்**

குறிப்பிட்ட அளவுக்குமேல் ஒரு சர்க்யூட்டில் அதிக மின்சாரம் பயன்படுத்தப்பட்டால் அதிகமாகச் சூடு ஏறும். 'இன்சுலேஷன்' உருகும். அதிலிருந்து தீப்பிடிக்கும். ஒரு ஸாக்கட்டில் பல பிளக்குகள் போடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். அப்படிச் செய்தால் அதில் வெப்பம் அதிகம் ஏறும்.

கழிவுப் பொருட்களைக் கண்ட கண்ட இடங்களில் சிதறிப் போடுவதும், குவியலாகப் போடுவதும் ஆபத்து. ரேக்குகள், கோணி (சாக்கு)கள் மூட்டை முடிச்சு சாதனங்கள், கழிவுப்பொருட்கள் ஆகியவற்றை வெப்பச் சாதனங்கள் கழிவுப் பொருள்கள் ஆகியவற்றை வெப்பச் சாதனங்களுக்கு அப்பால் வெகு தொலைவில் வைத்திருக்கவும். அப்படிப்பட்ட கழிவுப்பொருட்கள் அங்குமிங்கும் சிதைந்து கிடக்காமல் அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும்.

**இயந்திரங்களாலும் தீ விபத்து ஏற்படும்**

நல்ல முறையில் பராமரிக்கப்படாத இயந்திரங்களால் தீ விபத்து நேரிடும். லோடு அதிகரிப்பு, நாள்பட்ட உறுப்புகள், பெல்ட்டுகள் இயந்திரங்களில் உராய்வது, குப்பை மற்றும் பொருள் குவியல் போன்றவற்றால் தீ விபத்து நேரிடும்.

**ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு அறை**

கயிறு, சணல், ஜவுளி, பருத்தி, கோணி,நிலக்கரி,ஈரமான அல்லது எண்ணெய்ப்பசை உள்ள பொருள் ஆகியவை தனித்தனி அறைகளில் வைக்க வேண்டும். முடிந்தால், இந்த அறைகளுக்குத் தெளிப்பான் முறைவசதி, அல்லது



தீயணைப்புக் கருவி போன்றவை வைத்துக் கொள்ள வேண்டும்.

**வீடுகளில்**

எரிந்து கொண்டிருக்கும் ஸ்டவ்வில் மண்ணெண்ணெய் நிரப்பும் பெண்கள், துணையின்றி நெருப்பின் அருகில் விளையாட அனுமதிக்கப்படும் குழந்தைகள், இவை போன்ற கவனக்குறைவான செயல்களினால் ஏற்படும் தீ விபத்துக்கள் எவ்வளவு பெரிய இழப்புகளுக்குக் காரணமாகின்றன என்பது ஒவ்வொரு நாளும் செய்தித்தாள் வாயிலாக அறியலாம். இதுபோன்ற விபத்துக்களை மக்கள் கட்டாயம் தவிர்க்க முடியும்.

வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களே அதிகமாகியிருக்கின்றன. கவனக் குறைவாக அடுப்புகள் கொளுத்துவதும், அடுப்புச் சாம்பலை அணைக்காமல் எரிவதும், மின்சாரக் கருவிகளைவிருப்பம்போல் பயன்படுத்துவதுமான சாதாரணக் விஷயங்களே வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களுக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

**பெண்களின் பொறுப்பு**

பெண்கள் நெருப்பைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். திறந்த மண்ணெண்ணெய் விளக்கு போன்றவைகளை உபயோகப்படுத்தும் பொழுதும் மிக்க கவனம் வேண்டும். வீட்டின் சுற்றுப்புறங்களில் குப்பை, கூளங்களைப் போட்டுக் கொண்டு திறந்த வெளியில் தீ உண்டு பண்ணக்கூடாது.

குழந்தைகளின் தொட்டில் அடியிலோ, படுக்கை அறையிலோ விளக்குகளை வைத்து விட்டுத் தூங்கக் கூடாது. தீப்பெட்டி, பெட்ரோல், மண்ணெண்ணெய் திறந்த விளக்குகள் போன்ற அபாயம் விளைவிக்கும் பொருள்கள் குழந்தைகள் அணுகும்படி வைக்கக்கூடாது. திரு




விழாக் காலங்களில் குழந்தைகள் மனம் போன போக்காகப் பட்டாசுகளை வெடிக்க அனுமதிக்கக்கூடாது.

**விழிப்பாக இருத்தல் வேண்டும்**

புகைபிடிப்பவர்கள் வேலை செய்யும் பொழுதும், படிக்கும் பொழுதும் படுக்கும்பொழுதும், புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கையாள்கிறார்கள். ரேடியோப் பெட்டிகள் இஸ்திரிப் பெட்டிகளையும் உபயோகத்திற்குப் பின் அணைக்க மறந்துவிடக்கூடாது.

வீடுகளில் மண்ணெண்ணெய், பெட்ரோல். 'ஸ்பிரிட்' முதலியவைகளைக் கண்ட இடங்களில் கவனக் குறைவாக வைக்கக் கூடாது. பெட்ரோல், டீசல், வண்டிகளைப் பழுது பார்க்கும் பொழுது அவைகளின் அருகில் தீக்குச்சிகளையும், மூடியில்லாத விளக்குகளையும் பயன்படுத்தக் கூடாது. அடுப்பு, ஸ்டவ் அல்லது ஹீட்டரைப்பயன்படுத்தம்போது நாம் உடுத்தும் ஆடை அதன் மீது படாதபடி விழிப்பாக இருக்க வேண்டும். பற்ற வைத்த பிறகு ஸ்டவ்வுக்குள் மண்ணெண்ணெய் ஊற்றக்கூடாது.

**கிராமப்புறங்களிலும் தீ விபத்து**

நகரங்களில் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும், அடிக்கடி பல தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றில் ஏராளமான சொத்துக்களும் கால் நடைகளும் விவசாயப் பொருட்களும், பயிர்களும், மனித உயிர்களும் கூட சேதமாகின்றன.

இந்த விபத்துக்களில் பெரும்பாலானவற்றை எளிதாகத் தவிர்க்க முடியும். சேதங்களையும் கணிசமான அளவில் குறைக்க முடியும். நகரங்களைவிட கிராமங்களில் சில குறைகள் உண்டு. கிராமங்களில் கூரை வீடுகளில் குடியிருக்கிற கிராம மக்கள் ஏனோதானோ என்று இருந்துவிடுவதனால் தீ விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றன.

அடுப்பின் மேல் உள்ள சூடான பாலை பாத்திரங்களை, எடுப்பதற்கும், வைப்பதற்கும் உடுத்தியிருக்கும் ஆடைகளை பயன்படுத்தக்கூடாது. அணைக்காத நெருப்புத் தணலைக் குப்பைச் சேமிப்புத் தொட்டிகளிலோ அல்லது குப்பைக் குழிகளிலோ மற்ற வெளியிடங்களிலோ கவனக்குறைவாகப் போடக்கூடாது.

குழந்தைகளைச் சமையல் அறையில் தனியாக விட்டுவிட்டு வெளியில் செல்லக்கூடாது.

கண்ணாடிச் சிம்னி இல்லாத விளக்குகளைக் கூரை ஓரமாகச் சுவரில் மாட்டி வைப்பதும், தூண்களுக்கு அருகில் வைப்பதும், குழந்தைகளுக்கு அருகில் வைப்பதும்கூடாது.

சமையல் வேலை முடிந்ததும் எரிகின்ற விறகுக் கட்டைகளை மறக்காமல் அணைத்து விட வேண்டும்.

**பொறுப்புணர்ச்சி இருந்தால் தீ விபத்து வராது**

தடுப்புநடவடிக்கைகள்எடுத்தும் தீ விபத்துக்களின எண்ணிக்கைகள் குறைந்தபாடில்லை. சேதமாகும் பொருள்களின் மதிப்பும் உயர்ந்து கொண்டு தான் போகிறது. ஆகையால் தீணைப்பு சாதனங்களை அதிகரிப்பதாலோ தீயுடன் போராடும் வழி முறைகளை நவீனப்படுத்துவதாலோ மட்டும் போதாது. என்னதான் தீயணைப்பு நிலையங்கள் எப்பொழுதும் தயார் நிலையில் இருந்து கொண்டு, விழிப்புணர்ச்சியுடன் பணிபுரிந்தாலும், தீ விபத்து ஏற்பட்ட பின்னர், தீயுடன் போராடி அதைப் பெருக விடாமல், சேதத்தை முடிந்த அளவு குறைக்கவே அவை பெரிதும் பயன்படுகின்றன. மற்றும் தீ விபத்து ஏற்பட்ட செய்தி சரிவரவோ அல்லது உடனடியாகவோ கிடைக்கப் பெறாவிட்டாலோ, ஊர்திகள் இருக்கும் இடத்திலிருந்து விபத்துஇடத்தை அடைய நேரம், வழியில் மக்கள் வாகன நெரிசல், சரியான சாலைகள் இல்லாமை, குறுகலான பாதைகள், தேவையான தண்ணீர் வசதி அருகில் இல்லாமை போன்ற பல காரணங்களால், ஒரு சிறிய தீ விபத்தும் பெரிதாக வளரக்கூடும். ஆனால், பொது மக்கள் உஷாராக இருந்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டால் பெரும்பாலான தீ விபத்துக்களை நிச்சயம் தவிர்க்க முடியும்.

தீயினால் உண்டாகும் சேதம் நாட்டின் இழப்பு. இதைத் தவிர்ப்பது நம் அனைவரின் பொறுப்பு!

—ஆனந்தன்

# தைல மர வளர்ப்பு


சி. சுரேந்திரன்
உதவிப் பேராசிரியர்,
வன இயல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்.


ஆஸ்திரேலியாவிலிருந்து 1860 ஆம் ஆண்டில் 'யூக்காலிப்டஸ்' என்னும் தைல மரங்கள் இந்தியா விற்குக் கொண்டு வரப்பட்டன.

காகிதம், செயற்கைப் பட்டுத் துணி முதலானவை தயாரிக்க தைல மரங்கள் பயன்படுகின்றன. சமவெளிகளில் காணும் 'யூக்கா லிப்டஸ் டெரட்டிகார்னிஸ், ஊட்டி, கொடைக்கானலில் கானலில் காணும் 'யூக்காலிப் டஸ் குளோபுளஸ்' வாசனை யான 'யூக்காலிப்டஸ் சிட்ரியோ டோரா' மற்றும் 'யூக்காலிப்டஸ் கிராண்டிஸ்' ஆகியவை தமிழ் நாட்டில் மிகுந்த அளவில் பயிரி டப்பட்டு வருகின்றன.

விரைவில் வளரும் தன்மை யாலும், நிலை நிறுத்தும் இயல்பி னாலும் மிகச் சிறந்த காகிதங்கள் எதிர்காலத்தில் யூக்காலிப்டஸ் மரக்கூழிலிருந்தே கிடைக்கப் பெறும். மூங்கிலின் பற்றாக்குறை யால், யூக்காலிப்டஸ் மரங்கள் காகிதத் தொழில் வளர்ச்சிக்கும் செயற்கைப்பட்டுத்துணி தொழி லுக்குத் தேவையான அடிப்படை மூலப்பொருளாகவும் நடை முறையில் விளங்குகின்றது.

வயல்களின் வரப்பிலும், சாலை யோரங்களிலும் நடப்பட்டால் காற்றுத் தடுப்பு மரங்களாக உதவி செய்து மண் அரிப்பைத் தைலமரங்கள் தடுக்கும். இந்திய வனவளத்தில் யூக்காலிப்டஸ் தோப்புகளுக்குப் பெரும்பங்கு உண்டு.

**இனமும் வளர்ச்சியும்:**

அறு நூறுக்கும் மேற்பட்ட யூக் காலிப்டஸ் இனங்கள் வெவ்வேறு தட்பவெப்பச் சூழ்நிலைகளில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றன.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள சஹாரன்பூர் மாவட்ட உழவர்கள் வரப்புகளில் தைல மரங்களை வளர்ப்பதோடு அல் லாமல் நிலங்களிலும், தரிசான, காலி நிலங்களிலும் தைல மரங் களை வளர்க்கிறார்கள்: அவர் களிடம் தைல மர நாற்றங்கால் களும் உள்ளன. ஏழாண்டு முடி வுற்றதும் மரம் நட்ட பலனை அனுபவிக்கின்றார்கள். மரம் நட்ட இடத்திலேயே காகிதத் தொழிற்சாலையினரால் மரத் திற்கு உடன் பணம் கொடுக்கப் படுகின்றது. தமிழ்நாட்டு உழவர் களும் இதைப் பின்பற்றித் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள லாம். யூக்காலிப்டஸ் மரங்களை வேளாண்மைக்கு உதவாத நிலங் களிலும் வயல் வரப்புகளிலும் நட்டுப் பலன் பெறலாம்.

---



# கிராமங்களில் மருத்துவ வசதிகள் மத்திய அரசு திட்டங்கள்



மாநிலங்களும், யூனியன் நிர்வாகப் பிரதேசங் களும் கிராமங்களுக்குச் சுகாதார வசதிகளை யும், மருத்துவ வசதிகளையும் செய்து தரும் பொருட்டு இந்திய அரசாங்கம் நான்கு திட்டங் களை ஏற்படுத்தியுள்ளது. சமுதாய சுகாதார ஊழியர்கள் திட்டம், மகப்பேறுகளைக்கவனிக்கும் தாதிகள் பயிற்சித் திட்டம்; மருத்துவக் கல்வி மறுபயிற்சித் திட்டம் பலநோக்கு மருத்துவச் சுகாதார ஊழியர்கள் திட்டம், என்ற நான்கு திட்டங்களை இந்திய அரசு துவக்கியுள்ளது.

இந்தியாவில் தற்போது கிராமங்களில் மருத்துவச் சுகாதாரத் தேவைகளை நிறைவேற் றும்பொருட்டு 5444 ஆதார சுகாதார நிலை யங்களும் 48,571 துணை நிலையங்களும் உள்ளன.

நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்கு எழுத்து மூலமாகப் பதிலளிக்கையில் சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு சங்கரானந்த் இத்தகவலை வெளியிட்டார்.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் சராசரியாக 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் மக்கள் வரைக்கும் அதாவது 80 முதல் 100 கிராமங்களுக்குச் சேவை செய்கின்றன. ஒவ் வொரு துணைச் சுகாதார நிலையமும் 10 ஆயி ரம் மக்களுக்கு அதாவது 10 கிராமங்களுக்கு சேவை செய்கிறது என்று அமைச்சர் கூறினார்.

கிராமப்பகுதிகளுக்கு மருத்துவ வசதிகளை விஸ்தரிக்கும்பொருட்டு, சமுதாய சுகாதார ஊழியர்கள் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒவ் வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கூடுத லாக ஒரு மருத்துவரை நியமிக்க ஏற்பாடு செய் யப்பட்டிருக்கிறது என்று திரு பி. சங்கரானந்த் கூறினார். 1982-83-ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக 5400 மருத் துவர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# அரசு பெண் அலுவலருக்கு பேறுகால விடுப்பு 90 நாள்!

அரசு பெண் அலுவலர்களுக்குப் பேறுகால விடுப்பு இதுவரை 60 நாளாக இருந்து வந்தது. இதனை 90 நாளாக உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாடு மூன்றாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரைத்தது.

அதனை ஏற்று ஏப்ரல் முதல் நாளிலிருந்து பேறுகால விடுப்பு 90 நாள் எடுத்துக் கொள்ளும் ஆணை அமலுக்கு வருகிறது.

3 குழந்தைகள் வரைதான் இந்தப் பேறு கால விடுப்புச் சலுகை அரசு பெண் அலுவலர் களுக்கு உண்டு.



காகிதத் தொழிற்சாலைக்கு உதவும் அடிப்படை மூலப்பொருளாக உள்ள யூக்காலிப்டஸ் டெரட்டிக்கார்னிஸ் புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. தமிழ்நாட்டில் ஆற்றங்கரைகளில் அதிக அளவில் வனத் தோட்ட நிறுவனத்தாரால் ''யூக்காலிப்டஸ் டெரட்டிகார்னிஸ்'' வளர்க்கப்படுகின்றது.

**சாகுபடிக் குறிப்புகள்:**

விதைப்புச் செய்தல் : விதைகள் மிகவும் சிறியவையாக இருப்பதால், நாற்றங்கால், நாற்றுகள் வளரும் மண்தொட்டி அல்லது பாலித்தீன் பைகளில் நேரிடையாக விதைப்புச் செய்யலாம். எல்லாவற்றிலும் போதுமான வடிகால் வசதியுடன் நுண்துளைகளுள்ள நாற்றங்கால் மண் இருக்க வேண்டும்.

விதைகள் ½ அங்குலம் (அ) 1.3 செ. மீ. உயரத்திற்கு மேற்படாவண்ணம் நாற்றங்கால் மண்ணால் மூடப்பட்டிருக்க வேண்டும். 2.5 முதல் 5.0 செ.மீ. வரை மேல் மண் ஈரமாக இருக்கும் வண்ணம் கைத்தெளிப்பான் அல்லது நுண்ணிய துளைகள் கொண்ட பூவாளியால் நீர் ஊற்றப்பட வேண்டும்.

விதைகள் சாதாரணமாக மூன்று முதல் பத்து நாட்களுள் முளைக்க ஆரம்பித்துவிடும்.

கன்றுகளை எடுத்து நடுதல் : விதைத்து 30 முதல் 45 நாட்கள் ஆனபின் வளர்ச்சியடைந்த தைலக் கன்றுகளை, தாய்ப் பாத்தியிலிருந்து வேர் அறுபடா வண்ணம் பிரித்தெடுத்துத் தனித்தனியாக 10.0 X 20.0 செ. மீ. (200 காஜ்) பாலித்தீன் பைகளில் நடவேண்டும்.

பாலித்தீன் பைகள் 2:1:1 என்ற விகிதத்தில் செம்மண், மணல், தொழுஉரம் கலவையால் நிரப்பப்படவேண்டும். விதை இலைகளுக்கு மேல் இரண்டு அல்லது மூன்று ஜோடி இலைகள் இருக்கும் தருணத்தில், இடம் பெயர்த்து நாற்று நடவு செய்ய வேண்டும்.

பென்சில் அளவு சிறிய குச்சியால் நாற்றுக்களை வேர் அறுபடாமலும், சுற்றியுள்ள மண் பாதிக்காமலும் நாற்றங்காலில் தோண்டியெடுத்து நீர் ஊற்றிப் பதஞ்செய்த நாற்றுக்கலவை கொண்ட பாலித்தீன் பையின் மத்தியில் துவாரம் செய்து நட வேண்டும்; மண்ணைக் கையால் கவனமாக அணைக்க வேண்டும். நாற்றுகளின் தண்டை எந்தச் சமயத்திலும் கையால் தொடா வண்ணம், இலைகளின் நுனியால் மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். வேர் பிடித்து நாற்றுகள் வளரத் தேவையான போதுமான அளவு நீர் ஊற்றி, நோய் நொடிகள் வராவண்ணம் பாதுகாக்க வேண்டும்.

**நடவு முறை:**

இனி நடவு செய்தல் பற்றிக் கவனிப்போம்: நாற்றுகள் 30 முதல் 45 செ. மீ. உயரமுள்ளதாக இருக்க வேண்டும். இந்த வளர்ச்சி விதைத்த தேதியிலிருந்து 3 முதல் 5 மாதத்திற்குள் காணப்படும்.

நிரந்தரமாக நடும் இடத்தில் 2.0 X 2.0 மீட்டர் இடைவெளியில் 30 கன செ. மீ. குழி தோண்டப்பட்டு பாலித்தீன் பைகளை பிளேடினால் கவனமாக ஒருபுறம் கிழித்து, பின் பாலித்தீன்களைக் கவனமாக அகற்றி நாற்றின் வேர்களைச் சுற்றிய மண் சிறிதளவுகூட சேதமடையாவண்ணம் நடவு செய்து மண்ணை இறுக அணைத்து விட வேண்டும். செடிகளை நடுவதற்கு முன் ஒவ்வொரு குழியிலும் 25 கிராம் பி.எச்.சி. 10 சதவீதம் அல்லது செவின் மருந்து தூவ வேண்டும். நாற்றுக்களைச் சுற்றி 15 செ. மீ. தூரத்திற்குக் கிண்ணம் பறித்து விட வேண்டும். நீர் தேங்கி வேர் பிடித்துச் செடி வளர இது வகை செய்யும். ஒரு எக்டருக்கு 2500 நாற்றுகள் தேவைப்படும். இவ்வாறு நட்டு ஏழாண்டுகளுக்குப் பின் வளர்ந்த மரங்களை வெட்டலாம். இந்த மரங்கள் காகிதம் செய்ய உபயோகிக்கப்படுகின்றன. ஒரு எக்டேர் பரப்பில் 60 லிருந்து 80 டன் வரை மரம் கிடைக்கும். வெட்டப்பட்டபின் மறுதாம்புப் பயிராக இரண்டு முறை சுழற்சியில் அறுவடை செய்யலாம்.

**ஆய்வுத் திட்டங்கள்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வனவியல் துறையில் மர மேம்பாடு ஆய்வுத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன: யூக்காலிப்டஸ் டெரட்டிகார்னிஸில் நடக்கும் ஆய்வுத் திட்டங்களாவன :

(அ) அதிக விளைச்சல் தரும் மரவகையை இனச்சேர்க்கையால் உருவாக்குதல் .

(ஆ) தேவையான குணாதிசயங்களைக் கொண்ட மரக்கூழ் இனங்களைப் பாரம்பரிய ஆய்வின் மூலம் கண்டுபிடித்தல்.


(இ) மறுதாம்புப் பயிர் தன்மையும், உரமிடுதலுக்கு இயங்கி அதிக விளைச்சல் தரும் இயல்பும் கொண்ட மரங்களைத்தனியாகப் பிரித்து ஆய்வு செய்தல்.

(ஈ) விதையிலாப் பெருக்க முறைகள் மூலம் இன அபிவிருத்தி செய்யும் ஆய்வுகள்.




# இயற்கை தரும் செல்வங்கள்...

# இன்னுயிர் காக்கும் மருந்துகள்...



கஜகர்ணி
சீந்தில்
வெட்பாலை
சிறியா நங்கை
பெரியா நங்கை
சர்ப்பகந்தி

.....இவையெல்லாம் என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

இவை இயற்கையாகக் கிடைக்கும் சில மூலிகைகளின் திருநாமங்களேயாகும்!

இந்த மூலிகைச் செடிகளை சென்னை அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை - மூலிகைப் பண்ணையில் (Medicinal Farm) பார்க்கலாம்.

**கஜகர்ணி**

இந்த மூலிகைகளுள் 'கஜகர்ணி என்பது ஒரு வகை. இதைத் தமிழில் 'மெருகன் கிழங்கு' என்று வழங்குவார்கள். 'கஜகர்ணி' என்றால் என்ன? இந்தச் செடியின் இலைகள் தடித்து, பெரியவையாக, யானைக் காதுபோல் இருக்கின்றன. அதனால் இதை வட மொழியில் கஜகர்ணி (கஜம்-யானை, கர்ணம்-காது) என்று அழைக்கின்றனர். இதன் இலைகள் கீல் வாதத்துக்கு அதாவது மூட்டு வீக்கத்துக்கு மருந்தாகப் பயன்படுகின்றன.

**சர்ப்பகந்தி**

மேற்சொன்ன மூலிகைச்செடிகளூன்றி, சித்தரத்தை, முள்ளங்கி, கொடிவேலி, துளசி, நொச்சி இலை, ஆடா தொடை (ஆடு தொடா இலை), புங்கு, வசம்பு, சித்தா மணக்கு, நாயுருவி, கற்றாழை, நித்தியகல்யாணி, மாந்த பூண்டு, நஞ்சு முறிப்பான், மஞ்சள்-இப்படி மூலிகை வகைகளின் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். இவற்றுள் சர்ப்ப கந்தி என்னும் மூலிகை, இரத்த அழுத்தத்துக்குச் சிறந்த மருந்தாகத் திகழ்கிறது!

இன்னொரு செடியையும் பார்க்கிறோம். அதன் பெயர்: 'கட்டிப் போட்டால் குட்டிப் போடும்!' ஆம். இந்தச் செடியின் இலையைக் கிள்ளி, தரையில் ஊன்றினால் பிறகு அது ஒரு செடியாக வளரும்! இதுவும் ஒரு மூலிகைச் செடியே!

பண்டைக் காலத்தில் நமது முன்னோர்கள், மூலிகைச்செடிகளைத் தம் வீட்டுத் தோட்டத்தில் வளர்த்து, நோய் வந்த போது அவற்றைப் பயன்படுத்தி வந்ததை நாம் அறிகிறோம். இப்போதும் கூட கிராமங்களில் இதனை நாம் பார்க்கலாம்.

**முதன் முதலில்....**

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அரிய, அற்புதமான இயற்கை தந்த செல்வங்களான பச்சிலைகள்—மூலிகைகள் மண்டிக் கிடக்கும் பண்ணைதான், தமிழக அரசின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள 'மூலிகைப் பண்ணை.'

## தமிழ்நாட்டின் முதல் மூலிகைப் பண்ணை

1968-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இந்தப் பண்ணை, 10 ஏக்கர் பரப்பளவில் காட்சியளிக்கிறது. தமிழ்நாட்டில்யே முதன் முதலாக அமைக்கப்பட்ட இந்தப் பண்ணையை மேலும் மேலும் வளர்த்திட - இன்னும் பல அரிய மூலிகைச் செடி வகைகளைக் கொண்டு வந்து இங்கே சேர்த்திட நல்ல பல திட்டங்களை அரசு தீட்டியுள்ளது.

**போலிகள் ஜாக்கிரதை!**

இந்த மூலிகைப் பண்ணையில் 10 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களில் திரு ஏ. கோபால் (வயது 55), திரு பி. முருகேசன் (வயது 47) ஆகிய இருவரும் மூலிகைச் செடிகள் வளர்ப்பதில் அனுபவம் உள்ளவர்கள். மேற்கொண்டு மூலிகைச் செடிகள் தேவைப்பட்டால், இவர்கள் நகரின் 100 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்களுக்குச் சென்று, மூலிகைச் செடிகளைக் கொண்டு வருகிறார்கள். மதுரவாயல், திருமழிசை, வெள்ள வேடு, தரமணி முதலிய கிராமங்களுக்குச் சென்று மூலிகைச் செடிகளை அடையாளம் கண்டு எடுத்து வருகிறார்கள்.

செடிகொடிகள் மண்டிக்கிடக்கும் புதர்களில், காடுகளில் மூலிகைச் செடி எது என்பதை இவர்கள் பார்த்த மாத்திரத்திலேயே கண்டுபிடித்து விடுவார்கள். இந்தச் செடிகளில் போலிகளும்

உண்டாம்! அதாவது மூலிகைச் செடி போன்றே அவை காணப் படுமாம்!

### வரப்பிரசாதம்

இந்தப் பண்ணையில் உள்ள மருந்துச் செடிகள், சித்த, யுனானி, ஆயுர்வேதம் ஆகிய மூன்று வகை யான மருத்துவங்களுக்குப் பயன் படுகின்றன.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையின், ஒரு அங்கமாக இயங்கி வரும் இந்த மூலிகைப் பண்ணைதான், இந்த மருத்துவமனை நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கு கிறது. ஆம். இந்தப் பண்ணை யில் வளரும் பச்சிலை மூலிகை களிலிருந்துதான் மருந்துகள் செய்யப்படுகின்றன.

### தமிழ்நாட்டில் இது ஒன்றே!

இந்த மருத்துவமனைக்கு ஒரு நாளைக்குச் சுமார் 1500 நோயா ளிகள் வருகின்றனர். சென்னை மட்டுமல்ல, தமிழ்நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் நோயாளிகள் இந்த மருத்துவமனையை நாடி வருகின்றனர். இவ்வளவு பேருக் கும் வற்றாது மருந்துகளை வாரி வழங்கி வரும் இயற்கையின் சக்தியை என்னென்பது? 150 படுக்கை வசதிகள் கொண்ட இந்த மருத்துவமனை, இந்திய மருத்துவத்தில், நாட்டு மருத்து வத்தில் தலைசிறந்து விளங்கிவரு கிறது.

இந்த மருத்துவமனையில் குறிப்பாக மஞ்சள் காமாலை, ஆஸ்துமா, தோல் சம்பந்தமான நோய்கள், வயிற்றுவலி போன்ற வைக்குத் தனிமருத்துவம் (Special Treatment) பார்க்கப்படுகிறது.

சித்த, யுனானி, ஆயுர்வேதம் ஆகிய மூன்று வகையான மருத் துவங்களுக்கும் சிகிச்சையளிக்கப் படும் இந்திய மருத்துவமனை, தமிழ்நாட்டில் இது ஒன்றே!

இந்த மூலிகைப் பண்ணையின் மருந்துச் செடிகள், இந்த மருத் துவமனைக்கு மட்டுமல்ல, அவை 1. தலைமைச் செயலகம், 2. சேப் பாக்கம் 3. திருவல்லிக்கேணி. 4. சைதாப்பேட்டை ஆகிய இடங் களில் இயங்கிவரும் சித்த மருத் துவமனைகளுக்கும் பயன்பட்டு வருகின்றன.

### மருந்து செய்நிலையம்:

[illegible]லிகைகளைக் கொண்டு, ம[illegible] எங்குத் தயார் செ[illegible]ர்?

அ[illegible] அண்ணா அரசினர் இந்தி[illegible] மருத்துவமனைக் கட்ட



செந்தூரங்கள் கல்வங்களில் அறைக்கப்படுகிறது.



யாக சாலையல்ல, பாக சாலை!



லேகிய சரக்குகளை இலகுவில் கலவை செய்யும் இயந்திரம்.

டத்தை ஒட்டியுள்ள ஒரு தனி இடத்தில் - அமைதியான சூழ் நிலையில்அமைந்துள்ளது,'மருந்து செய் நிலையம்'. இந்த இடத்தில் தயாரிக்கப்படும் மருந்துகளே மேற்கண்ட இடங்களுக்கெல்லாம் அனுப்பப்படுகின்றன. இந்த மருந்துசெய் நிலையத்தில் சித்த, யுனானி, ஆயுர்வேத மருத்துவத் துக்கென, தனித்தனியே மருந்து கள் தயாரிக்கப்படுகின்றன. இவ் வாறு மருந்துகள் தயாரிக்கும் பணியில் 45 பேர் ஈடுபட்டுள்ள னர்.

**'பெட்' கஷாயம்!**

*அதோ! அந்த ராட்சச அண் டாவில் கொதிப்பது என்ன?சாம் பாரா? இல்லை! சர்ம நோய்க் கான சிவப்பு எண்ணெய்யேஅது!*

நாம் காலையில் எழுந்ததும் 'பெட் காப்பி' சாப்பிடுகிறோம் அல்லவா? அதைப்போல, இந்த மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக் குக் காலையில் தருவது காப்பி அல்ல, கஷாயம்! ஆம். அந்தக் கஷாயம் 13 பெரிய அலுமினிய பாத்திரங்களில் காய்ச்சப் படுவதை இங்கே நாம் பார்க்க லாம். இந்த இடத்தில் செந்தூரங் கள் அடுப்பில் எரிக்கப்படுவதை யும், மற்றொரு பகுதியில் அவை கல்வங்களில் அறைக்கப்படுவதை யும் பார்க்கிறோம்.


இந்த மருந்து செய் நிலையத் தில், மருந்துகள் தயாரிப்பதற் கான நவீன இயந்திரங்களும் இருக்கின்றன. மருந்துப் பாகைக் கலக்க, சலிக்க, மாத்திரைகளைக் காய வைக்க நவீன இயந்திரங் கள் உள்ளன.

**வகை வகையான மருந்துகள்**

தயார் செய்த மருந்து வகை களைச் சேமித்து வைக்கும் ஒரு பெரிய கூடத்தைப் பார்க்கி றோம். 300வகையான மருந்துகள் இங்குச் சேமித்து வைக்கப்பட்டுள் ளன. லேகியம், தைலம், சூரணம் இப்படி பல்வேறு மருந்துகள் அதற்கேற்ற பாத்திரங்களில் பத் திரமாக வைத்து மூடி, பெயர்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

மூலிகைச் சரக்குகள் பண்டக சாலை (Raw Drugs) ஒன் றைப் பார்க்கிறோம். இங்கு நூற் றுக்கணக்கான மூலிகைகள் சேக ரித்து வைக்கப்பட்டுள்ளன. தாதுப் பொருள்கள், வேர்கள், சுக்கு இப்படி காய்ந்த நிலையில் உள்ள மூலிகைகள் இங்கு ஏராள மாக உள்ளன.

இவ்வாறு ஆண்டுக்கு ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் இந்நிலையத்தில் தயாரிக்கப் படுகின்றன. அவை ஆயிரக்கணக் கான நோயாளிகளைக் குணப் படுத்துகின்றன.



**மூலிகைகளைத் தூளாக்குவதும், சலிப்பதும் இயந்திரமே!**

**கிடைத்தற்கரிய செல்வங்கள்**

இம்மருத்துவமனைக் கட்ட டத்தின் ஒரு பகுதியில், மருந் தாளுநர் 2 ஆண்டு பட்டயப் படிப்புக்கான ( Diploma in Pharmacy ) வகுப்பு ஒன்று நடக்கின்றது. இதில் சித்த,ஆயுர் வேத, யுனானி ஆகிய மூன்று பிரிவுகளைச் சேர்த்து 30 பேர் பயில்கின்றனர்.

மருத்துவமனைக்குள் ஓலைச் சுவடிகள் எப்படி வந்தன?

'சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழு' ஒன்று இங்கே செம்மை யாகச் செயல்பட்டு வருகின்றது. இது தமிழகத்திலுள்ள சித்த மருத்துவச் சம்பந்தமான ஓலைச் சுவடிகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வரு கிறது. அவற்றைப் புலவர்கள், அறிஞர்கள் ஆய்ந்து, பகுத்து, தொகுத்து நூல்களாகப் பதிப் பிக்கின்றனர். இவ்வாறு இக்குழு இதுவரை 27 நூல்களை வெளி யிட்டிருக்கின்றது. பல நூல்கள் அச்சில் உள்ளன.

தற்பொழுதுஇங்குச்சுமார்1200 ஓலைச்சுவடிகள் உள்ளன. இது வரை நூறு ஓலைச் சுவடிகளுக் கான பட்டியல் ஒன்றும் வெளி யிடப்பட்டுள்ளது. கிடைத்தற் கரிய செல்வங்களான, இந்தப் பழங்கால ஓலைச் சுவடிகளில் பல அற்புதமான மருத்துவச் செய்திகள் புதைந்துள்ளன. அவற்றை வெளிப்படுத்தும் பணி யில் இக்குழு முனைந்து செய லாற்றி வருகின்றது.

**மீண்டும் வராது..**

நாட்டு மருந்துச் சிகிச்சையால் என்ன நன்மை?

''ஆங்கில அல்லது அலோபதி மருத்துவச் சிகிச்சை என்பது அந்த நேரத்துக்கு நிவாரண மளிக்கக்கூடியதாக இருக்கும். சில நாட்கள் கழித்து, மீண்டும் அந்நோய் வரலாம். ஆனால், நாட்டு மருந்துச் சிகிச்சை என் பது நாள்பட குணமாகும் என் றாலும், நாளடைவில் அந்நோய் அறவே நீங்கிவிடும். மீண்டும் வரவே வராது'' என்கிறார் இம் மருத்துவமனைக் கண்காணிப்பா ளர் திரு மூகம்மது ஹபிபுல்லா எல்.ஐ.எம்., அவர்கள்.

நாட்டு மருத்துவம் என்றால், உப்பு, புளி இல்லாமல் பத்தியம் இருக்க வேண்டுமே என்று பயந்து சிலர் வராமல் இருந்து விடுவ துண்டு.


'பத்தியம்'என்பது ஒரு ஒழுக்க முறைதானே அன்றி வேறல்ல. சில நோய்களுக்கு, சில உணவுப் பொருள்களை உட்கொண்டால் அதனால் பாதகமான விளை வுகள் ஏற்படலாம். சில மருந்து களை உட்கொள்கின்ற காலத் தில் சில உணவுப் பழக்க வழக் கங்களை - சில ஒழுக்கங்களைப் பின்பற்றாவிட்டால், அந்த மருந் தினுடைய திறன் குறையலாம் அல்லது அந்த மருந்தினுடைய நோய்போக்கும்ஆற்றல்குறைந்து தீய விளைவுகள் ஏற்படலாம். ஆகவே, பத்தியம் இருப்பது பாத கமில்லை. நமக்குச் சாதகமே!'' என்று பத்தியம் கண்டு பயப்படு பவர்களுக்குஆறுதல் கூறி அழைக் கிறார்கள். இம் மருத்துவமனை ஆர்.எம்.ஓ. திரு.எம். பரமேஸ் வரன் அவர்களும், டாக்டர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் எம்.டி., அவர்களும்.

இயற்கை தரும் செல்வங்கள்- பச்சிலை மூலிகைகள், நம் இன் னுயிர் காக்கும் மருந்துகளாய் இருந்து நம்மை வாழ வைக்கின் றன. அந்தப் பணியில் அயராது பணியாற்றி வரும் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத் துவமனையை எவ்வளவு பாராட் டினாலும் தகும்.

—பி. வி. கிரி.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

■ **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

■ **கிராம ஏற்புத் திட்டம்:**

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

■ **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

■ **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித்தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

மாணவர் பக்கம்

# பீப்பீ...

—பொ. மறைமலை

''ஐயோ, வயிறு வலிக்கிறதே.. என்னாலே தாள முடியலியே...'' ஒருவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு கத்திக் கொண்டிருந்தான்.

அது ஒரு தனியார் மருத்துவ மனை. நோயாளிகள் பலர் காத்துக் கொண்டிருந்தார்கள்.

''இன்னும் பத்து நிமிடத்தில் டாக்டர் வந்து விடுவார்.......'' என்று கம்பவுண்டர் சொல்லி விட்டு தன் அறைக்குள் நுழைந்தார்.

காத்துக் கொண்டிருந்த நோயாளிகள் சலித்துக் கொண்டார்கள். சிலர் எழுந்து வெளியே போய் டாக்டரின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் வருவதாகக் காணோம்!

வெளியில் நோயாளி யாரையாவது பார்க்கப் போயிருப்பாரோ?

காத்துக் கொண்டிருந்த நோயாளிகள் சுவரிலிருந்த கடியாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரவு மணி ஏழு.

அப்போது—

நான்கைந்து பெண்கள் ஒரு சிறுவனைத் தூக்கிக்கொண்டு அழுதபடி உள்ளே வந்தார்கள்.

நோயாளிகளும், நோயாளிகளை அழைத்து வந்தவர்களும் பதறிக் கொண்டு அந்தச் சிறுவனைப் பார்த்தார்கள்.

அவன் தாய் அவனைத்தோளில் சுமந்து கொண்டிருந்தாள். காற்று இல்லாத தோல் பொம்மை மாதிரி அவன் தொங்கிக்கொண்டிருந்தான். கண்கள் செருகிக் கொண்டிருந்தன. பேச்சே இல்லை. அவன் தாய் ஓவெனக் கதறி அழுது கொண்டிருந்தாள்.

அதைக் கேட்டு கம்பவுண்டர் உள்ளே இருந்து வெளியே ஓடி வந்தார். சிறுவனைச் சுற்றிக் கூட்டம் கூடி இருந்தது.

''பையனுக்கு என்ன ஆச்சு?'' கம்பவுண்டர் கேட்டார்.

''வந்து...பையன், விளையாட விக்கிறாங்கல்லே விசில், அதை விழுங்கிட்டான்.....'' கூட வந்த ஒரு அம்மாள் சொன்னாள்.

''என்ன? விசிலையா விழுங்கிட்டான். தெருவிலே வித்துக்கிட்டுப் போவாங்களே மூங்கில் விசில்.....பீப்பீன்னு ஊதுமே, அதையா?'' கம்பவுண்டர் கேட்டார்.

''ஆமா, அதையேதான் விழுங்கிட்டான் . ..'' என்றாள் அவன் தாய், கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

''அப்படீன்னா, சீக்கிரமா ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டுப்போங்க!'' என்று அவசரப்படுத்தினார் கம்பவுண்டர்.

''ஆமா, சீக்கிரமா ஒரு ஆட்டோவை வைச்சிகிட்டுப்போங்க. நேரத்தைக் கடத்தாதீங்க....'' என்றார் ஒருவர்.

ஒருவர் ஆட்டோவைத் தேடி ஓடினார். அந்தத் தாயோ என்ன செய்வதென்று புரியாமல், தெருவில் நின்று கொண்டிருந்தாள். ஆட்டோவைத் தேடிப் போனவர் திரும்பி வந்து, 'ஆட்டோ வராதாம்' என்றார்.

அந்தத் தெருவில் போவோர் வருவோர் அந்தப் பரிதாபத்தைப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். காரில் சென்றவர்களுக்கு அந்தத் தாயின் அழுகுரல் கேட்கவில்லை. போலும்! அவர்கள் வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

டாக்சியை அழைத்து வருவதாகச் சென்ற ஒருவர், அப்படியே போய்விட்டாரோ?

நேரம் ஆக ஆக தாயின் அழுகுரலும் அதிகமாகியது.

அந்தச் சமயத்தில்—

ஒரு ஸ்கூட்டர் அந்தப் பக்கமாக வந்தது. ஸ்கூட்டரின் முன் பக்க விளக்கொளியின் மூலம் அந்தச் சிறுகூட்டம் இருப்பதைப் பார்த்தார், ஸ்கூட்டரில் வந்தவர். அங்கே இருந்து அழுகுரல் வருவதையும் கேட்டார். உடனே ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு,



# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.

**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்




அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2317 TM

இறங்கி வந்து என்ன என்று விசாரித்தார்.

அந்தத் தாய் நடந்ததைச் சொன்னாள், அழுகைக்கிடையே.

அவர் தாமதிக்கவில்லை. உடனே அந்தத் தாயை ஸ்கூட்டரில் உட்காரச் சொன்னார். அந்தத் தாயும் தயங்காமல், தன் மகனைத் தோளில் கெட்டியாகச் சுமந்தவாறு ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

ஸ்கூட்டர் விரைந்தது, ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கி!

ஸ்கூட்டர்காரர் வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போதுதான் வரும் வழியில் இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்திருக்கிறார். பார்த்தும் பார்க்காதது போலச் செல்வதற்கு அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. மனிதாபிமானம் அவரை மேலும் போகாமல் தடுத்திருக்க வேண்டும். இல்லையென்றால், 'யார் எப்படிப் போனால் நமக்கென்ன?' என்று மற்றவர்களைப் போல கண்டும் காணாமல் போயிருப்பார் அல்லவா? இத்தனைக்கும் அவர்வீடு, அதே தெருவில் இருந்தது!

''டாக்டர் வந்து விட்டார்!'' என்று ஒரு பையன் குரல்கொடுத்தான். எல்லாருக்கும் அப்போதுதான் தெம்பு வந்தது. வெளியில் நோயாளி ஒருவரைப் பார்க்கப் போயிருந்த டாக்டர், அப்போதுதான் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்.

நோயாளிகள் ஒவ்வொருவராகச் சென்று டாக்டரைப் பார்த்தனர். பிறகு மருந்தை வாங்கிக் கொண்டு வெளியே வரும்போது, அந்தச் சிறுவன் நினைவு வரவே, ''பாவம்! அவன் என்ன ஆனானோ'' என்று தமக்குள்ளே கேட்டுக் கொண்டு சென்றார்கள்.

''குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொடுக்க வேண்டியதுதான்... ஆனா, நாமும் கொஞ்சம் ஜாக்கிரதையா பார்த்துக்கணும்'' என்றாள் குழந்தையுடன் வந்த தாய்.

''குழந்தைகள் கண்டதை வைத்து விளையாடறதாலே தான் இப்படியெல்லாம்வருது..'' என்று சலித்துக் கொண்டார் ஒரு பெரியவர்.

''கோலி, காசு, பலப்பம், ஆணி இதையெல்லாம் வைச்சிக்கிட்டு விளையாடறதைப் பார்த்துக் கொண்டும் சிலர் சும்மா இருக்காங்களே....'' என்றார் ஒரு இளைஞர்.

## முதன் முதலில்...!

* பாருக்குள்ளே சிறந்த பரிசு நோபல் பரிசு. அப்பரிசினை முதன் முதலாகப் பெற்ற ஐரோப்பியரல்லாத அறிஞர் ரவீந்திரநாத் தாகூர்.
* முதன் முதல் மின்சார ரயில் போக்குவரத்து ஆரம்பமானது 1925-ல். இது பம்பாய் விக்டோரியா டெர்மினசுக்கும், குர்லாவுக்குமிடையே ஏற்பட்டது.
* முதல் நீர்மின் நிலையம் மைசூரில் உள்ள சிவசமுத்திரம் என்னுமிடத்தில் 1902-ல் தொடங்கப்பட்டது.
* இந்தியாவிலேயே முதன் முதலாக கல்கத்தாவில்தான் குடிக்கும் 'சோடா' விற்பனைக்கு வந்தது.
* இந்தியாவில் முதன் முதலில் தபால் தலை வெளியிடப்பட்டது, 1825-ல்.
* முதன் முதலில் இந்திய தேசப் படம் 1752-ல், பா. ஆன்வில் என்னும் பிரெஞ்சுக்காரரால் வெளியிடப்பட்டது.

## நீங்களும் எழுதலாம்!

குட்டிக்கதைகள், புதிர்கள், கவிதைகள், துணுக்குகள், விடுகதைகள் முதலியனவற்றை மாணவர்கள், இளைஞர்கள் எழுதி அனுப்பலாம். அனுப்பப்படும் தகவல்களுடன் முழு முகவரியினைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

—ஆசிரியர்.

# பாலும் தேனும்...

பாலோடு தேன் கலந்தாற்போல, பள்ளிக் கல்வியோடு பொது அறிவும் சேர்ந்தால்தான் இனிக்கும்-அறிவு வளரும்-வாழ்நாள் எல்லாம் தொடர்ந்து வரும்.

இன்று, அறிவு வளர்ச்சிக்கான சாதனங்கள் ஏராளம். பத்திரிகைகள், நூலகங்கள், திரைப் படங்கள், வானொலி, தொலைக்காட்சி இப்படி பல சாதனங்கள் நம்மைச் சுற்றி இருக்கின்றன. அவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம்முடைய பொது அறிவு வளர்ந்திருக்கின்றதா, இல்லையா என்பதை அளவிட நமக்குள்ளே சில வினா-விடை விளையாட்டை விளையாடிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கீழே சில வினாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு விடைகள் தெரியுமா? என்று பாருங்கள்:

1. உலக அதிசயங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று ஈராக் நாட்டில் இருக்கிறது. அது என்ன?
2. சென்னையில் புதிய கலங்கரை விளக்கம் எங்கு இருக்கிறது?
3. சென்னையில் பாம்புப் பண்ணை எங்குள்ளது?
4. தமிழில் வெளி வந்த முதல் நாவல் எது? அதன் ஆசிரியர் யார்?
5. 'கண்மணி' என்ற பதமும் 'வீரன்' என்ற பதமும் சேர்ந்து பொருள்படும் ஒரு பெயரில் ஒருவர் இருந்தார். அவர் இந்தியாவின் பிரதமராகவும் இருந்திருக்கிறார். அவர் யார்?
6. அண்மையில் நோபல் பரிசு பெற்ற, இந்தியாவில் உள்ள பெண்மணி யார்?
7. மகாகவி சுப்பிரமணிய பாரதி யாருக்குப் 'பாரதியார்' என்ற பட்டம் எந்த வயதில் கிடைத்தது?

(விடை-அடுத்த பக்கம்)

''எதிலும் ஜாக்கிரதையா இருந்தா, ஆபத்திலே இருந்து நாம் தப்பிக்கலாம்'' என்றார் ஒருவர்.

அப்போது, சிறுவனை ஏற்றிச் சென்ற ஸ்கூட்டர்காரர் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

மருந்து வாங்கிக் கொண்டு வெளியே வந்த பெரியவர் ஒருவர், ''என்ன ஆச்சு? பையன் பிழைச்சிக்கிட்டானா?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டார்.

ஸ்கூட்டர்காரரின் பதிலைக் கேட்க, உள்ளே இருந்து மற்ற ஆண்களும் பெண்களும் அங்கே வந்து கூடினார்கள்.

''பையன் பிழைச்சிடுவானாம். ஆனா, என் பையன் பிழைக்கலே ஐயா, பிழைக்கலே....'' ஸ்கூட்டர்காரர் அழாத குறையாகச் சொன்னார்.

''நீங்க என்ன சொல்றீங்க?'' எல்லாரும் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

''என் ஒரே மகன் இப்படித்தான் இரும்புத்துண்டை விழுங்கிட்டான்.... பேச்சு மூச்சு இல்லாம கீழே விழுந்திட்டான். அப்போ எங்கிட்டே ஸ்கூட்டர் இல்லே. அவசரத்துக்கு எந்த வண்டியும் கிடைக்கலே..... துடியாய்த் துடிச்சேன். நேரமோ ஆகிக்கொண்டே இருந்தது. பிறகு ஒரு வழியா மருத்துவமனைக்கு எடுத்துக்கிட்டுப் போனேன்.......என் மகன்...... என்னோட ஒரே மகன் வழியிலேயே இறந்துட்டானாம். டாக்டர் சொல்லிட்டாரு...'' என்று அவர் கண்களைத் துடைத்துக் கொண்டதைப் பார்த்து, மற்றவர்களும் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

## விடைகள்....

1. ஈராக் நாட்டில் பாபிலோனியா குன்றின் சரிவில் உள்ள மலைத் தோட்டம்.
2. காமராஜர் சாலையில், சென்னை வானொலி நிலையத்துக்கு எதிரில் உள்ளது.
3. சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் உள்ளது.
4. 'பிரதாப முதலியார் சரித்திரம்'. ஆசிரியர்: மாயூரம் வேதநாயகம் பிள்ளை.
5. திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் (லால்-கண்மணி, பகதூர் வீரன்).
6. அன்னை தெரஸா.
7. பதினோராவது வயதில்.



# வீரமாமுனிவர்

மனசை ப. கீரன்

வீரமாமுனிவர் என்ற பெயரைக் கேட்டதும் அவரை நம் இந்திய நாட்டைச் சேர்ந்தவராக எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு அவர் நம் நாட்டவராகவே ஆகிவிட்டார். ஆனால், அவர் பிறந்து வளர்ந்ததெல்லாம், ரோமாபுரியில் - இத்தாலியில்! பெஸ்கி என்பது அவரது பெற்றோர் அவருக்கு இட்ட பெயர். கான்ஸ்டன்டைன் ஜோசப்பெஸ்கி என்பது முழுப்பெயர். அவர் தமிழ்நாட்டுக்குக் கிறித்துவ சமயப் பணி புரிவதற்காக வந்தார். தமிழும், வடமொழியும், பாரசீகமும், இந்துஸ்தானியும் நல்ல தேர்ச்சியுடன் பயின்றார். அவர் இலக்கியங்களைத் தமிழிலேயே படைத்தார். வெளிநாட்டவரான அவர் தமிழ் படித்ததோடு மட்டுமல்லாமல், நம் நாட்டுப் பெரும் புலவர்களைப் போல் தமிழிலக்கியங்கள், கவிதைகள், கட்டுரைகள் கதைகள் பலவும் எழுதினார்.

வீரமாமுனிவர் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வாழ்ந்திருந்தார்.

தமிழ்நாட்டுக்கு வந்து, தமிழர்களோடு வாழ்ந்து, தமிழராகவே மாறிவிட்டார் வீரமாமுனிவர்.

சந்தாசாகிப் திருச்சியை ஆண்டு வந்த காலம், அப்போது வீரமாமுனிவர் திருச்சியில் வாழ்ந்திருந்தார். வீரமாமுனிவர் கிறித்துவச் சமயப்பிரச்சாரம் செய்ய வந்திருந்தாலும் சந்தாசாகிப் அவருக்கு ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள ஊர்களை நிலக்கொடையாக வழங்கியிருந்தார். அவரது அறிவு ஆழத்தை மெச்சி, ''சபாஷ்! இதோ இந்தப் பல்லக்கு அருமையான தந்தப் பல்லக்கு— என் அருமைப்பாட்டனார் சாதுலாகான் தம் வீரப் புகழுக்கு அறிகுறியாக உபயோகித்தது! இதைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் — என் திவானாகப் பணிபுரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

1740ல் திருச்சிக் கோட்டையை மகாராட்டிரர்கள் முற்றுகையிட்டனர். சாந்தா சாகிப் சிறைப்படுத்தப்பட்டார். அதனால் வீரமாமுனிவர் தப்பித்துத் திருநெல்வேலிக்குச் சென்றார். அப்போது அவருக்கு 60 வயது. இப்படி அவர் வாழ்வில் மேடு பள்ளங்கள்.

இவரை எப்போதும் சீடர்கள் சூழ்ந்திருப்பர். அவர் கவிதைகளை இயற்றி வேகமாகக் கூற, ஒவ்வொருவர் ஒரு வரியை எழுதித் தொகுத்ததாகச் சொல்வார்கள்.

தேம்பாவணி என்ற காவியத்தை இவர் படைத்தார்.

உருவில்லான் உருவாக
உலகில் ஒருமகன் உதிப்பன்
கருவில்லாக் கருத்தாங்கிக்
கன்னித்தாய் ஆயினையே''

என்று கொள்ளிடக் கரையிலுள்ள திருக்காவலூர் ஆலயத்தில் எழுந்தருளிய கன்னிமேரி பற்றி இவர் இயற்றிய திருக்காவலூர் கலம்பகத்தில் பாடியுள்ளார்.

வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம் என்ற உரைநடை நூல்களையும் எழுதினார்.

உலக அறிவிலாப் போலிச் சாமியார்களை நையாண்டி செய்து ''பரமார்த்த குருகதை'' என்ற அவிவேக பூர்ண குருகதை என்ற கதையை வீரமா முனிவர் எழுதினார். உரைநடை வளராத காலத்தில் நகைச்சுவை மிக்க இவர் எழுதிய கதை மிகுந்த சுவையுடன் மிளிர்கிறது! வெளிநாட்டு வீரமாமுனிவர் தமிழ் வளர்த்த பெரியோர்களில் குறிப்பிடத்தக்கவராவார்.




# நவீன தீயணைப்பு வண்டி

அடுக்குமாடிக் கட்டடங்களில் பெரிய தீ விபத்துக்கள் ஏற்பட்டு விடுவதுண்டு. அவ்வாறு ஏற்படும் தீயினை அணைப்பதில் தீ அணைப் புப் படையினருக்குத் தர்மசங்கட மான நிலைமை ஏற்பட்டு விடு கிறது. தீயணைப்புப் படையினர் தங்களிடம் இருக்கிற உபகரணங் களைப் பயன்படுத்தி, எப்படியா வது தீயை அணைத்துவிட வேண் டும் என்று போராடுகிறார்கள். அதுவும் முடியாமல் போய்விடு கிறது. இப்படிப்பட்ட தீ விபத் துக்களினால் உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்து விடுகின்றன.


மக்கள் நெருககமான நகரங் களில் பல அடுக்குமாடிக் கட்ட டங்கள் நாள் தவறாமல் உரு வாகிக் கொண்டு வருகின்றன. இதுபோன்று அடுக்கு மாடிகளில் மக்கள் குடும்பம் நடத்து கிறார்கள். தங்கள் கவனக் குறைவினால் சில இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதுபோன்ற உயிர்ச் சேதங்களி லிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள சென்னை நகரத்திற் கென ரூ. 42 இலட்சம் செலவில் ராட்சத, அற்புத, நவீன தீயணைப்பு வண்டி ஒன்றினை, தீயணைப்புப் படைக்காக இங்கி லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அந்த ராட்சத நவீன தீயணைப்பு வண்டியின் பெயர்: ''SNORKEL'' என்பதாகும்.

## கண்மூடி கண் திறப்பதற்குள்....

மாடிக்கட்டடம் மட்டுமல்லா மல் குடிசைப் பகுதிகளிலும் தீ விபத்துக்கள் ஏற்பட்டாலும் இந்த நவீன இயந்திரத் தீயணைப்பு வண்டியின் உதவியால் பெரிய சேதங்களைத் தவிர்க்க முடியும்.

இந்த ராட்சத வண்டியின் நீளம் 40 அடியாகும். வண்டியின் இயந் திரங்கள் முடுக்கிவிடப்பட்டதும், ராட்சதத் தீயணைப்பு வண்டி யின் பின்புறமுள்ள அகலப்பாதை போன்ற ரெயில்வே இயந்திரம் வேலை செய்யத் துவங்குகிறது. மடித்து மடித்து வைக்கப்பட்ட ஏணிகள் அடுக்கடுக்காய் உயரே எழும்பும். அதன் உச்சியில் கூண்டு போன்ற பாதுகாப்பான ஒரு அமைப்பில் தீயணைப்புப் படை வீரர்கள் இருப்பார்கள். வண்டி யிலுள்ள இயந்திரத்தின் உச்சி யில் உள்ள ஆட்கள், பூமியிலிருந்து 103 அடி உயரே சென்று நிற்க

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

வசதி செய்யப்பட்டிருக்கிறது. மாடிக் கட்டடப் பகுதியிலிருந்து ஒரே நேரத்தில் 7 பேரைக் கூண்டு போன்ற அமைப்பிற்குக் கொண்டு வந்து கண்மூடிக் கண் திறப்பதற்குள்ளாகத் தரைக்குக் கொண்டு வந்துவிடுகிறது அந்த இயந்திரம்!

**சுழலும் இயந்திரச் சாதனம்:**

103 அடி உயரத்திற்கு மட்டுமின்றி மேலும் 50 அடி உயரத்திற்கு எட்டும் அளவுக்குத் தண்ணீரைப் பீச்சி தீயை அணைக்கலாம். தீயில் அகப் பட்டுக் கொண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்கள் மிகவும் பத்திரமாகக் கூண் டில் ஏறி தரைக்குக் கொண்டு வந்து இறங்கலாம். தீயின் வெப் பம்-புகை மண்டலம் இவைகளின் தாக்குதலுக்கும் ஆளாகாமல் காக்கவும் வண்டியில், கருவிகள் பொறுத்தப்பட்டிருக்கிறது. மேலே கிளம்பும் அலுமினிய ஏணிகள் எந்தத் திசைக்கும் சுற்றும் அளவுக்கு இயந்திர அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது, இந்தத் தீயணைப்பு நவீன மோட்டார் வண்டி.

**வெள்ளோட்ட விழா!**

இந்தத் தீயணைப்பு நவீன மோட்டார் வண்டியை இங்கிலாந்திலுள்ள ''சைமன் ஸினர் கல்'' என்ற தீயணைப்பு உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனம் வடிவமைத்துத் தயாரித்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் 14 மாடிக் கட்டடமான எல்.ஐ.சி. கட்டடம் தீப்பற்றிக் கொண்டபோது கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில், இந்த நவீன இயந்திரம் சென்னை தீயணைப்புப் படைக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

இந்தப் புதிய நவீன தீயணைப்பு வண்டியின் வெள்ளோட்ட விழா'' சென்னை எழும்பூர் அட்லாண்டிக் ஓட்டலில் 25.3.80 அன்று நடைபெற்றது. தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு டி.என். லெட்சுமி நாராயணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் துவக்கி வைத்தார்.

விழாவில் தமிழகப் போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு கே. ஆர். செனாய், முன்னாள் தமிழ்நாடு காவல்துறைத் தலைவர்களான திரு எஃப்.வி. அருள், திரு. நியூட்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர். தீயணைப் புப்படைத் துறை இயக்குநர் திரு. நியூட்டன் தேவசகாயம் ஐ. பி. எஸ். அவர்கள் வரவேற்றார். துணை இயக்குநர் திரு. அருளய்யா நன்றி கூறினார்.

புதிதாக அறிமுகம் செய்யப் பட்டு இருக்கும் ரூ.42 இலட்சம் மதிப்புள்ள நவீன தீயணைப்பு வண்டி, மிகமிக அவசியம் என்பதை நேரில் பார்த்ததிலிருந்து உணரமுடிகிறது.

—ஆனந்தன்



## உழைப்புக்கு உணவுத்திட்டம்— கிராம வேலைவாய்ப்ப உத்தரவாதத் திட்டம்-செயலாக்கக்குழு

தமிழ்நாட்டில் உழைப்புக்கு உணவுத் திட்டத்தை அமல்படுத்திச் செயலாக்குவதற்குத் தமிழக அரசு ஏற்கெனவே மாநில அளவில் செயலாக்கக் குழு ஒன்றை அமைத்துள்ளது. 1979-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் கிராம வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை அமல் படுத்துவதற்காக, தலைவர் ஒருவரையும் செயலாளர் ஒருவரையும் கொண்ட இரு நபர்கள் கொண்ட உயர் மட்டக்குழுவினைத் தமிழ்நாடு அரசு அமைத்தது.

உழைப்புக்கு உணவுத்திட்டம், வேலை வாய்ப்புக்கு உத்தரவாதமளிக்கும் திட்டம் ஆகிய இவ்விரு திட்டங்களையும் இணைத்து, எல்லா வகைகளிலும் இத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயலாக்குவதற்கு ஒரு பொது ஏஜென்ஸி அமைக்க தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது. இப்போது 7 நபர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவினை அமைக்க அரசு ஆணை பிறப்பித் துள்ளது. உறுப்பினர்களின் விவரம்:


1. உணவுத்துறைச் செயலாளர்.
2. நிதித்துறைச் செயலாளர்.
3. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைச் செயலாளர்.
4. ஊரக வளர்ச்சி இயக்குநர்.
5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர்.
6. தலைமைப் பொறியாளர் (பாசனம்)
7. தலைமைப் பொறியாளர் (நெடுஞ் சாலை, மற்றும் கிராமப்பணிகள்

ஊரக வளர்ச்சி — உள்ளாட்சித் துறை செயலாளர் இக்குழுவின் அமைப்பாளராகப் பணிபுரிவர்.





கோவையில், அரசுப் பொருட்காட்சியை மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.3.80 அன்று துவக்கி வைத்தார்.



திருவொற்றியூர் நகராட்சியில் இரவுநேர துப்புரவுப் பணிக்காக 40 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள புதிய நவீன மிக்கி பிஷி சக்தி பவர் டில்லர் இயந்திரம் 14.3.80 அன்று இயக்கி வைக்கப்பட்டது. இது வரை எந்த நகராட்சியிலும் இது போன்ற இயந்திரம் பயன்படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# படமும் செய்தியும்

சென்னை எழும்பூரில், 4.4.80 அன்று கைத்தறிக் கண்காட்சியை ஆளுநரின் ஆலோசகர் திரு டி.என்.லட்சுமி நாராயனன் ஐ.ஏ.எஸ். திறந்து வைத்தார்.



இங்கிலாந்து அரசு, தமிழ்நாட்டுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ள கிராம சேவை நடமாடும் மருந்தகத்தை இங்கிலாந்து நாட்டின் துணைத் தூதுவர் என். ஏ. ஐ. பிரெஞ்ச் அவர்கள், ஆளுநரின் ஆலோசகர் திரு. டி. என். லட்சுமி நாராயணன், ஐ. ஏ.எஸ். அவர்களிடம் 27.3.80'ல் அளித்தார்.






# சேமிக்கும் குடும்பமே செழிக்கும் குடும்பம் !

## அனைவருக்கும் ஏற்ற சிறுசேமிப்புத் திட்டங்கள் !!

| திட்டத்தின் பெயர் | வட்டி விகிதம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|
| **தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் அலுவலகப் பணியாளர்கள்:** | | |
| 5 வருட வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் (Recurring Deposit) | 10.5% கூட்டு வட்டி | * அதிகப்படியான வட்டிவிகிதம் ஈட்டுறுதிச் சலுகை<br>* சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தின் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பு<br>• கடன் பெற வசதிகள். |
| **வருமான வரி செலுத்துவோர்:** | | |
| 15 வருட பொதுமக்கள் வருங் கால வைப்பு நிதி (Public Provident Fund) | 7.5% கூட்டு வட்டி | * வருமானவரிச் சட்டம் 80-சி பிரிவின் கீழ் வரி விலக்கு<br>* முதலீட்டை எந்த நீதி மன்றமும் ஜப்தி செய்ய முடியாது<br>* கடன் பெறவும் வசதிஉண்டு. வசதிக்கேற்றவாறு முதலீட்டை கூட்டியோ அல்லது குறைத்தோ செலுத்தலாம் (ஆண்டிற்கு ரூ. 100 முதல் ரூ. 30,000 வரை) |
| 10 வருடத் தொடர் வைப்புத் திட்டம் (Cummulative Time Deposit) | 6.75% கூட்டு வட்டி | * வருமான வரிச்சட்டம் 80-சி பிரிவின் கீழ் வரி விலக்கு சம்பளச் சேமிப்புத் திட்டத்தின் மூலமாகச் சேரலாம்.<br>* கடன் பெற வசதிகள். |
| **அதிகப்படியான பணம் திரும்பப் பெற விரும்புவோர்:** | | |
| 7 வருட தேசிய சேமிப்புப் பத்திரம் 5வது வெளியீடு (National Savings certificate Vth Issue) | 10.75% கூட்டுவட்டி | * ரூ. 100- ஏழே ஆண்டுகளில் 204.50 ஆக பெருகுகிறது. |

### விவரங்களுக்கு:

**சிறு சேமிப்பு இயக்குநர்,**
**நெ. 143, அண்ணாசாலை,**
**சென்னை–600 002.**

மண்டல தேசிய சேமிப்பு
இயக்குநர்
92, அண்ணா சாலை
சென்னை. 600 002.

எல்லா மாவட்ட ஆட்சியர்களும் மற்றும் ஆணையாளர், சென்னை மாநகராட்சி, உங்களுக்கு அருகாமையிலுள்ள அஞ்சல் அலுவலகம்.

# உலக நல்வாழ்வு நாள்-1980




# புகை நமக்குப் பகை

ஆண்டுதோறும் ஏப்ரல் 7-ஆம் நாள் 'உலக நல்வாழ்வு நாளா'கக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாள் உலக நல்வாழ்வு நிறுவனம் தொடங்கப்பட்ட நாளைக் குறிக்கிறது.

இந்த நாளில் உலகெங்கும் வாழும் மக்களின் நல்வாழ்வுக்கான பொருள் ஒன்று குறிக்கப்பட்டு, அதைப்பற்றி உலக் மக்களுக்கு விளக்கமளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இந்த ஆண்டின் பொருள் ''புகைப்பழக்கமா அல்லது நல்வாழ்வா-எதை விரும்புகிறீர்?''

புகை பிடிப்பது பல நாடுகளிலும் இப்பொழுது நிலவி வருகிற ஒரு பழக்கமாகும்.

நம் நாடும் அவற்றுள் ஒன்று. சிகரெட் பிடிப்பதுடன், உக்கா, பீடி, சுருட்டு பிடிக்கும் பழக்கமும் உள்ளது. மேலும் வெற்றிலைப் பாக்குடன் புகையிலை போடும் பழக்கமும் உள்ளது.

புகை பிடிக்கும் பழக்கம், மக்களிடையே பரவும் விதத்தை, தொற்று நோய்கள் பரவுவதுடன் ஒப்பிடலாம். ஏற்கெனவே புகை பிடிக்கும் பழக்கமுள்ளவர்கள் மூலமாகவே இப்பழக்கம் பரவுகிறது.

'புகை பிடித்தல் அல்லது புகையிலை போடுதல் உடல் நலனுக்குக் கேடு விளைவிக்கிறது' என்று பல ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

குறிப்பாக, நுரையீரல் புற்று நோய், மற்றும் பிற வகை புற்று நோய்களும் புகை பிடித்தலுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை மட்டுமா?

தொண்டைப் புண், இருமல், மூச்சுத்திணறல், பசியின்மை, நரம்புத் தளர்ச்சி, குடற்புண், உயர் இரத்த அழுத்தம் ஆகிய கோளாறுகளுக்கும் புகைப் பழக்கம் காரணமாக உள்ளது.

நுரையீரல் புற்றுநோயாளிகளில் 90 சதவிதம் பேர் புகைப் பழக்கமுடையவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் இந்நோய்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் பெருகி வருகின்றனர். இதற்குக் காரணம் புகைப்பிடிப்பவர்களின் தொகை பெருகி வருவதுதான் என்று கருதப்படுகிறது. இதோ ஒரு புள்ளி விவரம்:

1970-ஆம் ஆண்டில் சிகரெட்டுகள் உற்பத்தி 31,80,000 இலட்சமாக இருந்தது. ஆனால், இந்தத் தொகை 1976-ல் 38,50,000 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த அளவுக்கு நுரையீரல் புற்றுநோய், மற்ற இருதய நோய்கள், மூச்சுக்குழல் நோய்கள் குடற்புண் நோய்கள் ஆகியவற்றின் ஆபத்து மிகுந்துள்ளது எனலாம்.

புகைப்பழக்கம் இல்லாதவர்களுடன் ஒப்புநோக்கும்போது, புகை பிடிப்பவர்கள், குறை வாழ்வே வாழ்ந்து நாற்பது வயதி

லும் ஐம்பது வயதிலும் மிகுதியாக இறந்து விடுகின்றனர்.

புகைப் பழக்கம் நம்முடைய நல்வாழ்வுக்குக் கேடு விளைவிக்கும் தீய பழக்கமாகும்.

எனவே, புகைப்பழக்கமுடையவர்கள் உடனே அப்பழக்கத்தை நிறுத்துவது நல்லது. தமக்குத் தேவை நல்வாழ்வா அல்லது புகைப் பழக்கமா என்பதை அவர்களே முடிவுசெய்துகொண்டு இத்தீமையிலிருந்து அறவே விடுபட வேண்டும்.

புகைப் பழக்கமில்லாதவர்கள்-அப்பழக்கம் தம்மைபற்றிக் கொள்ளாமல் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

புகை பிடிப்பது பழக்கத்தினால் பற்றிக் கொள்கிறது; எனவே, மன உறுதியுடன் அப்பழக்கத்தை விட முயற்சி செய்ய வேண்டும்; உடனே விட முடியாதவர்கள் மெல்லமெல்ல குறைத்துக் கொண்டாவது வர வேண்டும்.

புகை பிடிப்பவர்கள், தம்முடைய உடல் நலனைக் கருதி, தம் குடும்பத்தின் நலனைக்கருதி தம்மைச் சார்ந்துள்ளவர்களின் நலனைக் கருதி-புகைப் பழக்கத்தைவிட முயற்சிக்க வேண்டும்.

"தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி, மனக் கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது."

—அண்ணல் காந்தியடிகள்.

## புகை பிடிக்கும் பழக்கத்தை நாம் அறவே விட்டுவிடலாம்!

### எப்படி ?

* புகை பிடிப்பதால் ஏற்படும் நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்து, குறித்துக் கொள்ளவேண்டும்.

* அடிக்கடி நாம் பிடிக்கும் சிகரெட்டை மாற்ற வேண்டும்.

* இப்பழக்கத்தைக் கைவிடுவதற்கு ஒரு நாளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

* புகைப்பிடிக்கும் பழக்கத்தை இரண்டு வாரக் காலம் ஊன்றிக் கவனித்து—ஒரு நாளுக்கு எத்தனைச் சிகரெட், எந்தெந்த நேரத்தில் பிடிக்கிறோம் என்பதையும்—எந்த நேரத்தில் கட்டாயம் தேவைப்படுகிறது—எத்தகைய நேரத்தில் தேவைப்படவில்லை என்பன போன்ற விவரங்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

* வழக்கமான எண்ணிக்கையிலிருந்து ஒரு நாளைக்கு ஒன்று குறைக்க வேண்டும். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அவ்வாறே செய்யவேண்டும். முயன்றால் எதுவும் முடியும்!

## கிராம மக்களுக்கு எட்டுகிற அளவுக்கு டெலிவிஷன் !

திரைப்படம் ஒரு சக்தி வாய்ந்த பிரசாரச் சாதனமாகும். கேளிக்கைக்காக மட்டுமல்லாமல், கலைகளையும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்க்கவும் இது பெரிதும் உதவுகிறது. திரைப்படத் தொழில் வளரவேண்டும்; இது, கிராமப்புறத்திற்கும் எட்ட வேண்டும்.

நாடு முழுவதிலும் பல இடங்களில் 'டெலிவிஷன்' நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும் நிலையங்களை அமைப்பது பற்றிப் பரிசீலனை நடந்து வருகிறது.

தபால்-தந்தித் துறையின் துணையுடன் இந்த நிலையங்கள் தொடங்கப்படும். இதன் மூலம் இந்தியாவின் மூலை முடுக்குகளில் இருக்கும் கிராமங்களில் வாழும் மக்கள்கூட டெலிவிஷனைப் பார்க்க முடியும்.

தமிழ்நாட்டில் கொடைக்கானலில் அஞ்சல் செய்யும் டெலிவிஷன் நிலையம் ஒன்று அமைக்க மத்திய அரசுத் திட்டமிட்டுள்ளது. மதுரையில் விரைவில் வானொலி நிலையம் அமைக்கப்படும் பணிகள் துவங்கப்படும். வானொலி, டெலிவிஷன் போன்ற நிறுவனங்களை அரசு பொறுப்பின்றி சுய நிறுவனங்களாக இயங்க அனுமதிக்கும் எண்ணம் இல்லை.

ஆசியாவிலேயே இந்தியாவில் மட்டும்தான் வண்ண டெலிவிஷன் இல்லை. ஆப்கானிஸ்தானம், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, வங்காள தேசம் போன்ற நாடுகளில்கூட வண்ண டெலிவிஷன் இருக்கின்றன. இந்தியாவிலும் வண்ண டெலிவிஷன் அமைக்கத் திட்டம் இருக்கிறது.

[சென்னையில் செய்தியாளர் மாநாட்டில், மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சர் திரு வி. பி. சாத்தே-5.3.80]

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்களுக்கு குளுமையூட்டும்
பருத்தி, மற்றும்பருத்தியில் அச்சிட்ட
சேலைகள், கோடைக் காலத்திலும்
குளிர்காலத்தைக்காட்டும் பல
வண்ணச் சேலைகள். நீடித்து
உழைப்பவை.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



ஒன்றிரண்டு குழந்தையே உவகை